பக்கங்கள்:20 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை 08.05.2022 கதிர் 184

### இது ரகசியம் அல்ல!

சேக்ஸ்பியரின் புகழ் பெற்ற ஹம்லெட் நாடகத்தில் ஒரு முக்கிய வசனம் 'To be, or not to be...' ('வாழ்வா?சாவா?') என்பது.

இன்றைய நிலையில் பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைமையும் அது தான். பதவியில் ☞2

# சர்வகட்சி இடைக்கால அரசுக்கு மகாநாயக்கர்கள் மீள வலியுறுத்து!

## ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எம்.பிக்களுக்கு திரும்பவும் செய்தி

கொழும்பு, மே 08

சர்வக்கட்சி இடைக்கால அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, மகாநாயக்க தேரர்கள் கூட்டறிக்கையொன்றின் ஊடாக மீண் டும் வலியுறுத்தி யுள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டறிக்கையின் பிரதிகள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ☞03

## ஆத்திரமூட்டும் வகையில், அச்சுறுத்தும் விதத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்கிறார்களாம்

### பாதுகாப்பு அமைச்சும் பொதுப் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து அறிவிப்பு

ஆத்திரமூட்டும் வகையிலும் அச்சுறுத்தும் விதத்திலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்கின்றனர் எனப் பாதுகாப்பு அமைச்சும் பொதுப் பாதுகாப்பு அமைச்சும் தெரிவித்துள்ளன.

தற்போதைய நெருக்கடியான காலத்தில் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் ☞20

### அவசரகால நிலைப் பிரகடனம் இப்போது அவசரமாக ஏன்?

## அரச உயரதிகாரிகளை நேரில் வந்து விளக்கம் தர மனித உரிமை ஆணையம் நேற்று அழைப்பாணை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை நாளை திங்கட்கிழமை மனித உரிமைகள் ☞20

## நீதிபதிகளின் பாதுகாப்பை அதிகரிக்க பிரதமர் பணிப்பு

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நீதிபதிகளின் பாதுகாப்பையும் உடனடியாக அதிகரிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடுவெல நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பை நீக்கியமை தொடர்பில் நீதித்துறை சேவைச் சங்கம் மற்றும் நீதிக்கான சட்டத்தரணிகள் சங்கம் இணைந்து பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்றமையை அடுத்து ☞20

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க சுயாதீன அணி தீர்மானம்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க சுயாதீன அணி தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர நேற்று அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா ☞20

## மேலும் 3 கடற்படைக் கப்பல்களை எல்லையில் இந்தியா நிறுத்தியது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.08

இலங்கை இந்திய எல்லையில் மேலதிகமாக கடற்படை கப்பல்களை இந்தியா நேற்று முதல் சேவையில் ☞20

# தேசிய இணக்கப்பாட்டு அரசுக்கு உடன்பட சஜித் அணி நிபந்தனை

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்த 13 அம்சத் திட்டத்துக்குச் சமதிக்க வேண்டுமாம்

தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வு யோசனையாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியும் அவரது அரசுத் தரப்பினரும் இணங்குவார்களானால் ஜனாதிபதி கோரும் தேசிய இணக்கப்பாட்டு அரசுக்கு தமது ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று ஜனாதிபதி தரப்புக்கு தெரியப்படுத்தினார் என அறிய வந்தது. ☞03



## ரணிலை ஆதரித்தும் எதிர்த்தும் அவர் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு முன்னால் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ☞2




## அவசரகால நிலைப் பிரகடனம்; சர்வதேசத் தரப்புகள் கண்டனம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இலங்கையில் மீண்டும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு உலக நாடுகள் பலவும் தமது கண்டனங்களையும் கரிசனையையும் தெரிவித்துள்ளன.

**ஐ.நா. பிரதிநிதி**

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட இணைப்பதிகாரி – அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான வரையறைகள் விதிவிலக்கு, விகிதாசார மற்றும் நியாயமானதாக இருக்கும் போது மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் அமைதியான முறையில் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்துவது ஓர் அவசரநிலை அல்ல. கருத்து வேறுபாடுகளுக்கான ☞20

## அவசரகால நிலை குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்!

### சபாநாயகரிடம் சுமந்திரன், சாணக்கியன் நேரில் கோரிக்கை

ஜனாதிபதியினால் திடீரென அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டிருக்கின்றமையால் அது குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிகம் சாணக்கியன் ஆகியோர் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேரில் சந்தித்து வலியுறுத்தினர்.

நாளை ☞20



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பதா? அல்லது விலகுவதா? – என்ற இக்கட்டு.

அதுவும் உத்தியோகப்பற்றற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றில் நேரடியாக ஜனாதிபதியே மற்றைய அமைச்சர்களுக்கு முன்னால் வைத்து பதவி விலகக் கேட்ட பின்னர் அந்தப் பிரதமர் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதா என்ற சிக்கல் மஹிந்த ராஜபக்ஷவுக்கு.

இந்த கோரிக்கையை – பதவி விலகக் கேட்கும் வேண்டுகோளை – எடுத்த எடுப்பில் மஹிந்தரின் சகோதரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மஹிந்தரிடம் முன்வைத்து விடவில்லை.

நேற்று முன்தினம் மாலையில் அந்தக் கூட்டம் ஆரம்பமான போதும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாசூக்காகத்தான் காய் நகர்த்தினார். ஆரம்பத்தில் நாட்டின் நெருக்கடி நிலை பற்றிய விவரங்களை வரிசைப்படுத்திய ஜனாதிபதி, ஒரு கட்டத்தில் இவ்வளவு சிக்கல் இருப்பதால் நானாக ஜன்னாதிபதிப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவா என்ற சாரத்தில் தமது உரையை முன்னெடுத்தார்.

அப்போது குறுக்கிட்ட அவரது விசுவாசிகள் 'ஐயையோ.. அப்படி செய்ய வேண்டாம்' என்று மறுத்துரைத்தனர்.

அப்படியானால் அதற்கு மாற்று என்ன என்ற பாணியில் பேச்சைத் திசை திருப்பிய ஜனாதிபதி, கடைசியாகப் பிரதமர் பதவி விலகி இடம் அளித்து, மாற்று அரசு அமைய ஏற்பாடு செய்வதுதான் வழி என்ற பாணியிலே விவகாரத்தை முன்நகர்த்தினார். எனினும் ஆரம்பத்தில் இந்த யோசனைக்கு பிரதமர் இணங்கவில்லை எனத் தெரியவந்தது.

நாட்டில் அரசியல் உறுதிப்பாடு இன்மையால், பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், இந் நிலைமை நீடித்தால் எதிர்காலத்தில் ஏற்படும் விபரீதங்கள் பற்றியும் ஜனாதிபதி விலாவாரியாக எடுத்துரைத்த பின்னரே பிரதமர் உள்ளடங்கலான அரசு பதவி விலக வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தார்.

ஜாதிபதியின் மேற்படி கோரிக்கை தொடர்பில் பதிலளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு அரசாங்கம் பதவி விலகுவது தீர்வாக அமையாதெனக் குறிப்பிட்டு, அதற்கான காரணங்களையும் பட்டியலிட்டுள்ளார்.

அரசு பதவி விலகினால், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அஞ்சியே 'பதவி விலகல்' என்ற முத்திரை குத்தப்படும் எனவும், தனது அரசியல் வாழ்வில் தோல்விகளைச் சந்தித்திருந்தாலும், இடையில் பாய்ந்தோடியது கிடையாது எனவும் மஹிந்த தனது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி, பிரதமர் பதவியில் நீடிப்பதற்கான நியாயங்களை முன்வைத்தார்.

மஹிந்தவின் கருத்துகளுக்கு ஆதரவாக தினேஷ் குணவர்தன, விமலவீர திஸாநாயக்க உள்ளிட்ட சில அமைச்சர்கள் குரல் கொடுத்தனர்.

எனினும், நாலக கொடஹேவா, சன்ன ஜயசுமன உட்பட ஜனாதிபதிக்கு சார்பான அமைச்சர்கள் சிலர் இதற்கு உடன்படவில்லை. பிரதமர் பதவி விலகி, புதிய அரசை அமைக்க வழிவிடுவதே சிறந்தது என அவர்கள் வாதிட்டனர். ஒவ்வொரு அமைச்சராக இராஜினாமாச் செய்தால் அது நெருக்கடியை மேலும் உக்கிரமடையச் செய்யும், எனவே, பிரதமர் பதவி துறந்தால் அமைச்சரவையும் கலைந்துவிடும் எனவும் அவர்கள் பரிந்துரைத்தனர்.

அரசு மாறி, மாற்று அரசு மூலம் ஸ்திரமான நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதிலும் நெருக்கடி ஏற்படும். ஆகவே அரசு மாற்றம் விரைந்து செய்யப்பட வேண்டும் என்று நிதி அமைச்சர் அலி சப்ரி தம் பக்கத்துக்கு விளக்கமளித்தார்.

இறுதியில், பிரதமர் பதவியைத் துறப்பதுதான், பிரச்சினைக்குத் தீர்வெனில், அதனைச் செய்துவிட்டு, எதிரணியில் அமர்வதற்குத் தான் தயார் என மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் –

சர்வகட்சி இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ இணங்கி விட்டார் என்று ஒரு செய்தி நேற்று பரபரப்பாக பரவியது. ஆனால் விடயம் அப்படியல்ல.

நேற்று சஜித் பிரேமதாஸவுடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், முடியுமானால் பிரதமர் பதவியை ஏற்கும் படியும் அழைப்பு விடுத்தார் எனத் தெரிகிறது.

இது குறித்துத் தமது கட்சியின் எம்.பிக்களோடு கலந்துரையாடிவிட்டுத் தாம் பதிலளிப்பார் என சஜித் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினார்.

அதன் பின்னர் தனது கட்சியினருடன் சஜித் இதுபற்றி விரிவாகக் கலந்துரையாடி இருக்கிறார். சாதக, பாதகமான அம்சங்கள் பேசப்பட்டிருக்கின்றன. அதன் பின்னர் சஜித் தன்னுடைய தரப்புப் பதிலை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார்.

தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடியைத் தாண்டுவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 13 அம்சங்கள் அடங்கிய யோசனைத் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரானால் அதனடிப்படையில் அந்த இடைக்கால அரசை ஆதரிக்கத் தாங்கள் தயார் என்று சஜித் பதில் அளித்தார் எனத் தெரிகிறது.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

முதலாவது – இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சமர்ப்பித்த யோசனையின் அடிப்படை. அது பல்வேறு விடயங்களைக் கொண்டிருந்தாலும் அதில் முக்கியமானது அடுத்த ஆறு மாதத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அடியோடு ஒழிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணங்க வேண்டும் என்பது. அதனை அவர் ஏற்றுக் கொள்வாரானால் இடைக்கால அரசை நிறுவுவதற்கு சஜித்தின் கட்சி உதவும். பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்.

ஒருவகையில் பார்த்தால் இது, பிரச்சினைக்குத் தீர்வாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கடந்த மாதம் அவரைச் சந்தித்தபோது கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்த திட்டம்தான். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று வாக்குறுதி அளிப்பதன் மூலம் இப்பிரச்சினையை ஜனாதிபதியும் அரசும் தாண்ட முடியும் என்பதை அப்போது சுமந்திரன் பிரதமருக்கு எடுத்துரைத்திருந்தார். அந்த யோசனையின் மற்றொரு வடிவம்தான் சட்டத்தரணிகள் சங்கத்தின் திட்டமாக இப்போது பிரேரிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்தது – இந்த விவகாரத்தை சட்டத்தரணிகள் சங்கத்தின் யோசனையாக முன்வைப்பதன் மூலம் இதற்கு ஜனாதிபதி இணங்குவாரானால் அவருக்கும் தங்களுக்கும் (சஜித் அணிக்கும்) இடையில் மத்தியஸ்தராக – மூன்றாம் தரப்பாக – இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினரை இடைநடுவில் நிறுத்தும் ஒரு தந்திரோபாயத்தை இந்த அணுகுமுறை மூலம் சஜித் கையாண்டு இருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

இப்போதுதான் முயற்சி ஆரம்பம். போகப் போக என்ன நடக்கின்றது என்று பார்ப்போம்.

– மின்னல் –

---

## ரணிலை ஆதரித்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்தும் அவரின் ஆதரவாளர்கள் குறித்த பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த பகுதியில் சற்று அமைதியின்மை ஏற்பட்டுள்ளதுடன் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை ரணில் விக்கிரமசிங்க தன்னைச் சந்திக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து ரணில் மேலும் தெரிவிக்கையில், எனது வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் விரும்பினால் சிறிகொத்தாவில் திங்களன்று என்னைச் சந்திக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த பகுதியில் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்ட இருபகுதியினரும் அங்கிருந்து கலைந்து சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
















## மணமகள் விபரம்

பிறந்த திகதி-28.11.1995
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அவிட்டம் (2)
கி.பா-64
செவ்-8ல்
தகைமை-B.COM
தொழில்-MANAGEMENT ASSTANT
எதிர்பார்ப்பு- அரசசேவை- வெளிநாடு மணமகன் தேவை

---

பிறந்த திகதி-22.03.1993
மதம்-இந்து
ஜாதி-V சைவம்
நட்சத்திரம்-பூரட்டாதி (3)
கி.பா-18
செவ்-12ல்
தகைமை- கல்வியியற் கல்லூரி
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- வெளிநாடு உள்நாடு அரச சேவை மணமகன்

---

பிறந்த திகதி-30.06.1997
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பரணி
கி.பா-24
செவ்-10ல்
தகைமை-B.sc
தொழில்-COMBANY.
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரச சேவை மணமகன்

---

பிறந்த திகதி-25.07.1988
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-கேட்டை
கி.பா-43
செவ்-4ல்
தகைமை-CIMA(2)
தொழில்-AUDDIT FORM
எதிர்பார்ப்பு- DOCOTOR ENG BANK MANAGER மணமகன்

---

பிறந்த திகதி-28.11.1988
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-புனர்பூசம் (4)
கி.பா-78
செவ்-8ல்
தகைமை-B.sc CIVIL ENG
தொழில்-SINGAPOUR WORK
எதிர்பார்ப்பு- ENG,IT மணமகள்SINGAPOUR CEYLON மணமகன்

---

பிறந்த திகதி-2.06.1993
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-விசாகம்
கி.பா-69
செவ்-9ல்
தகைமை-B.sc CIVIL ENG
தொழில்-(CIVIL ENG)
எதிர்பார்ப்பு- ENG அரச சேவை தனியார் மணமகன்

---

பிறந்த திகதி-12.05.1994
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அச்சுவினி (1)
கி.பா-30
செவ்-சூரி 6 ல்
தகைமை-B.sc LECTCAL ENG
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு-ENG ACCOUNT COLOMBO, SINGPOUR மணமகன்

---

பிறந்த திகதி-28.06.1977
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-விசாகம் (2)
கி.பா-38 - செவ்-1ல்
தகைமை-B.sc
தொழில்-விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு- அரச சேவை

## மணமகன் விபரம்

பிறந்த திகதி-13.11.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தராடம்
கி.பா-14
செவ்-சூரி2ல்
தகைமை-I.T.SOFTWAR ENG
தொழில்-AMERICAN COMPANY
எதிர்பார்ப்பு-ENG DOCTOR மணமகள்

---

பிறந்த திகதி-11.07.1993
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ரேவதி
கி.பா-33
செவ்-11ல்
தகைமை-B.sc HDNS
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- பட்டதாரி ஆசிரியர் மணமகள்

---

பிறந்த திகதி-13.08.1979
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-அச்சுவினி (3)
கி.பா-48
செவ்-5ல்
தகைமை-B.sc M.sc
தொழில்-UK PR.
எதிர்பார்ப்பு- UK மணமகள் விருப்பம் ஐரோப்பா மணமகள்

---

பிறந்த திகதி-05.02.1982
மதம்-இந்து
ஜாதி-P
நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா-34
செவ்-8ல்
தகைமை-G.C.E A/L
தொழில்-சொந்தக் கடை
எதிர்பார்ப்பு- ஓரளவு படித்த மணமகள் சீதனம் தேவையில்லை

---

பிறந்த திகதி-22.10.1987
மதம்-இந்து
ஜாதி-P
நட்சத்திரம்-சித்திரை (1)
கி.பா-36
செவ்-1ல்
தகைமை-G.C.E A/L
தொழில்-BISINEES
எதிர்பார்ப்பு- A/Lபடித்த மணமகள்

---

பிறந்த திகதி-18.9.1987
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பூசம்
கி.பா-28
செவ்-10ல்
தகைமை-B.sc CIVIL ENG
தொழில்-SINGAPOUR WORK
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள்

---

பிறந்த திகதி-25.11.1988
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-மிருகசீரிடம் (2)
கி.பா-53
செவ்-2ல்
தகைமை-ELECTONIC ENG
தொழில்-COMPANY உரிமையாளர்
எதிர்பார்ப்பு- படித்த மணமகள்

---

பிறந்த திகதி-26.09.1983
மதம்-R.C
ஜாதி- பகுதி
நட்சத்திரம்-பரணி
கி.பா-63
செவ்-1ல்
தகைமை-B.COM H.N.DA
தொழில்-D.O
எதிர்பார்ப்பு- அரச சேவை மணமகள்
(R.C) or இந்து

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



### தேசிய இணைக்கப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய இணைக்கப்பாட்டு அரசுக்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைத் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்தார் என அறிய வந்தது.

அதனையடுத்து சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள 13 கோரிக்கைகளுக்கமைய, தேசிய இணக்கப்பாட்டுக்கான வேலைத்திட்டம் உருவாக்கப்படுமானால், இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு சஜித் அணி தீர்மானித்துள்ளது.

★ அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கிவிட்டு, 19 ஐ மீளவும் செயற்படுத்துதல்.

★ நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் புதிய பிரதமர் நியமனம்.

★ அமைச்சரவை எண்ணிக்கை - 15.

★ பதினைந்து நிபுணர்கள் அடங்கிய தேசிய சபை.

★ தேசிய இணக்கப்பாட்டு அரசின் ஆயுள் 18 மாதங்கள்.

★ ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்குவதற்கான உறுதிப்பாடு. - இவை உட்பட 13 கோரிக்கைகளை சட்டத்தரணிகள் சங்கத்தால் முன்வைக்கப் பட்டுள்ளன.

இந்த யோசனைகள் தொடர்பில்சட்டத்தரணிகள்சங்கத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி இன்று பேச்சு நடத்தவுள்ளது.

---

### சர்வக்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு தீர்வுகாண அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் எனவும், இக்கட்டான சூழ்நிலையிலும் கட்சி அரசியலை முன்னெடுக்க அரசியல்வாதிகள் முற்பட்டால் மக்களின் கடும் சீற்றத்துக்கு அவர்கள் உள்ளாவார்கள் எனவும் மகாநாயக்க தேரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

சசிகா லேணர்ஸ்
Reg.No:DS882
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
கிளை நிறுவனங்கள் :-





| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393 | T.P: 021 225 2333 | T.P: 021 225 1664 | T.P: 021 227 0616 | T.P: 021 225 2454 | T.P:021 226 0999 | T.P: 021 222 8004 | T.P: 021 224 5001 | T.P: 021 221 5472 |
| 070 301 3014 | 071 255 4135 | 070 301 3016 | 071 577 0616 | 070 510 2484 | 071 755 0999 | 070 301 5004 | 076 384 0684 | 070 301 3012 |
| 077 343 6622 | 077 434 3798 | 077 434 3149 | 077 435 3995 | | 077 261 2446 | 070 301 3017 | 077 934 6509 | |
| | | | | | | 077 998 6247 | | |

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அவசர நிலைக்குப் பின்னால்...!

அவசர நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்திய மைக்கு அவரது அரசு கூறிய காரணங்கள் வேடிக்கையா னவை.

நாட்டில் பெரும் பொருளாதார, அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றமை உண்மை. அதனால் மக்கள் எழுச்சி – அரசுக்கு எதிரான கிளர்ச்சி – ஏற்பட்டிருக்கின்றது என் பதும் உண்மைதான்.

ஆனால், வெளிநாடுகளும், இராஜதந்திரிகளும் சுட் டிக்காட்டுகின்றமை போல மேற்படி பொருளாதார நெருக் கடிகளுக்கு எதிரான மக்களின் உணர்வெழுச்சி அஹிம்சை முறையிலேயே முன்னெடுக்கப்படுகின்றது. மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரளுகின்ற சூழ்நிலை யில் வன்முறைகள் பெருமளவில் வெடிப்பதற்கான வாய்ப் புண்டு. ஆனால் மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பி டுகையில் சகிப்புத்தன்மை, பொறுமை, அஹிம்சை முறைமை தாராளமாகவே கடைப்பிடிக்கப்படுகின்றது.

அப்படி இருக்கையில் இந்த அவசர கால நிலைமை ஏன்? இதன் பின்னால் இருக்கும் நோக்கம் – இலக்கு – கருத்து – யாது என்று மேற்குலகு முற்கூட்டியே சந்தேகத் துடன் கேள்வி எழுப்புகின்றது.

“இலங்கை மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்து அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல் மற்றும் சேவையை முன்னெடுக்கவே அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.” – என அரசாங்கத் தகவல் திணைக் கள அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அத்தியாவசிய பொருள்களின் விலை மக்களின் கைகளை விட்டு எகிறி எங்கோ போய் விட்டன. சாதாரண பாமரக் குடும்பம் ஒரு இறாத்தல் பாண் வாங்கவே விழி பிதுங்கும் நிலைமை. எரிபொருள், எரிவாயு உட்பட பல அவசரப் பொருள்களுக்கு ஒரு புறம் பற்றாக்குறை என் றால் மறுபுறம் உச்ச விலை. மருந்துப் பொருள்கள் இல்லை. அதனால் மருத்துவ சேவை முடங்கி விட்டது. பாடசா லைக் கல்வி குழம்பி விட்டது. எழுதுவதற்குக் காகிதாதி களுக்குக் கூடப் பற்றாக்குறை.

இந்தச் சீத்துவத்தில் எந்த அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பதற்கு அரசுக்கு அவசர கால நிலைமை தேவைப்படுகின்றது? – இது ஒரு நியாயமான கேள்வி.

அடுத்தது ‘இலங்கை மக்களின் வாழ்க்கையைப் பாது காப்பதற்கு’ அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படி ருப்பதாகவும் அரசுத் தரப்பின் அறிக்கை கூறுகின்றது.

உண்மையில் அதுவல்ல காரணம், ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களை ஒழித் தப்புங்கள் என்று மக்கள் கிளர்ந் துள்ளனர். மக்களிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற் கான நடவடிக்கைகளை எடுக்கவே ஆட்சியாளர்கள் அவ சர காலச் சட்டத்தை கையில் எடுத்திருக்கின்றார்கள் என்பதே நிஜம்.

ஆகவே இந்த அவசர கால நிலைப் பிரகடனம் என்பது அரசு கூறுவது போல மக்களைக் காப்பதற்கு அல்ல. சீற்றமுற்றிருக்கும் மக்களிடமிருந்து ஆட்சியாளர்களைக் காப்பாற்றுவதற்குத்தான்.

மக்களிடம் கெட்ட பெயரைச் சம்பாதித்து விட்ட இந்த ஆட்சியாளர்கள், இனி ஒரு தடவை ஜனநாயகத் தேர்தல் களில் முகம் கொடுத்து மீள மாட்டார்கள் என்பது அவர் களுக்கே தெரியும்.

அதனால் கிடைத்த வாய்ப்பை இறுதி வரை அனுப வித்து, சுகித்துக் கொண்டு, சூறையாடிச் செல்ல விரும் புகின்றார்கள். இன்னொரு தடவை மக்களைச் சந்திக்க வாய்ப்பில்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்து, அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் – அல்லது அதற்கான பிரக்ஞையின்றி காரியமாற்றுகின்றார் கோட்டாபய.

அவருடன் அணி சேர்ந்திருப்போரின் கதியும் இனி அது தான். மீண்டும் ஒரு தடவை மக்கள் முன் வரும் ஆசையை அவர்களும் சேர்ந்து துறந்து விடுவதுதான் அவர்களுக்கு உள்ள ஒரே மார்க்கம்.

# நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக அரசியல்வாதிகள் முடிவெடுக்கமுடியாது

## நாமல் இப்படிக் கருத்து



பொருளாதாரம் தொடர்பில் அரசியல்வாதி களால் தீர்மானங்களை எடுக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

போதிய வருமானம் இன்றி வரிச்சலுகை வழங்கும் அரசின் முடிவு சரியல்ல என்றும் அவர் கூறினார். உள்ளூர் வர்த்தக நிறுவ னங்கள் பொருளாதாரத்தில் பணத்தை மீள முதலீடு செய்யும் என்ற நம்பிக்கையில் ஜனா திபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி நம்பியவாறு அது நடக்கவில்லை எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று ரூபாவை மிதக்குமாறு பொருளாதார நிபு ணர்கள் வழங்கிய ஆலோசனையை அர சாங்கம் ஏன் பின்பற்றவில்லை என ஊடகவி யலாளர் நாமல் ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அவர், அதற்கு முடி வெடுப்பவர்களும் பொறுப்பு என்று கூறினார். அரசியல்வாதிகள் பொருளாதாரம் தொடர் பான தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையே இதற்கு காரணம் என அவர் தெரி வித்துள்ளார்.

அதிகாரிகள் தவறான அறிவுறுத்தல் களை வழங்கியதை தற்போதைய நிதிய மைச்சர் அலி சப்ரியும் ஒப்புக்கொண்டுள் ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி செல்வாநகர் ஐயப்பன் ஆலயத்திற்குள் சடலம் ஒன்று மீட்பு

*கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் உள்ள ஐயப்பன் ஆலயத்திற் குள் சடலம் ஒன்று நேற்று (சனிக்கிழமை) காலை பொது மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.*

*43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான லாலசிங்கம் என்ற வர்த்தகரே சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*பொலிஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் சடலம் மீட் கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட வுள்ளது.*

*கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# உரிமைகள் மற்றும் கருத்து சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என்கிறார் சாரா



இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால பிரகடனத்துக்கு எதிராக கொழும் பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார்.

தற்போதைய சவால்களைத் தீர்ப்பதற்கு ஜனநாயக மற்றும் அமைதியான அணுகு முறை அவசியம் என சாரா ஹல்டன் அர சாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் அனைத்து அடிப்படை உரிமை களுடன் அமைதியான போராட்டத்துக்கான உரிமைகள் மற்றும் கருத்து சுதந்திரம் மதிக் கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

அந்த உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அவசரச் சட்டங்கள் ஜனநாயக கருத்து சுதந் திரம் மற்றும் தீர்வுகளுக்கு எதிராகச் செயல் படுகின்றன என்றும் சாரா ஹல்டன் தெரிவித் துள்ளார்.

# இரகசியமாக ஆலயத்திற்கு சென்று நேர்த்திக்கடன் செய்தார் ஷிரந்தி!



அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ மாவ னல்லை அளுத்நுவர தேவாலயத்துக்குச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏப்ரல் 30 ஆம் திகதி காலை 7.30 மணி யளவில் பாதுகாவலர்களுடன் எந்தவித முன் னறிவிப்பும் இன்றி கோவில் வளாகத்துக்குச் சென்றுள்ளார்.

பிரதமரின் மனைவி அளுத்நுவர தேவா லயத்திற்கு சென்று நேர்த்திக்கடன் மேற் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அது தொடர்பில் தேவாலயத்தில் பூஜை நடத்துபவர் வினவியபோது, அது தொடர் பான தகவலை வெளியிட மறுத்துள்ளார்.

அன்றைய தினம் அளுத்நுவர தேவால யத்துக்கு வருவதற்கு முன்னதாக பிரதமரின் மனைவி அதிகாலையில் கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கும் சென்றுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மிகக் குறுகிய காலம் அளுத்நுவர தேவா லயத்தில் இருந்த ஷிரந்தி ராஜபக்ஷ, அங்கு நடைபெற்ற பூஜை வழிபாடுகளின் பின்னர் கொழும்பு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரண மாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்)
172 செ.மீ | சூ.செவ் : 04

**22678 | வே | 1978**
புங்குடுதீவு | இந்து | B.Com,
MBA | Business Analyst
அமெரிக்கா | மகம் (சிம்மம்)
170 செ.மீ | செவ் : 08

**23842 | வே | 1981**
நயினா தீவு | இந்து | BA
CIMA | Own Business
உத்தரம் (கன்னி)
167 செ.மீ | செவ் : 12

**22531 | வே | 1982**
சண்டிலிப்பாய் | Divorced
BBA | Director
உத்திரட்டாதி (மீனம்) | இந்து
177 செ.மீ | செவ்: 12

**22588 | க | 1983**
பண்டத்தரிப்பு | கிறிஸ்தவம்
A/L | Handyman
கேட்டை (விருச்சிகம்)
180 செ.மீ | அவுஸ்ரேலியா

**22555 | வே | 1984**
மாத்தளை | இந்து | A/L
Tourist Guide | Hong Kong
பூசம் (கடகம்)
165 செ.மீ | செவ் : 08

**22579 | வே | 1984**
புங்குடுதீவு | இந்து | A/L
Staff | பிரான்ஸ்
அத்தம் (கன்னி)
165 செ.மீ

**22636 | சாண் | 1984**
ஆனைக்கோட்டை | இந்து
A/L | Own Business
பரணி (மேடம்)
183 செ.மீ | செவ் : 02

**22543 | கு | 1986**
காரைநகர் | இந்து | A/L
Customer Service Executive
ரேவதி (மீனம்)
170 செ.மீ | செவ் : 12

**22675 | வி | 1987**
நல்லூர் | இந்து | BA, MIPA &
AFA | Aviation Officer
அவுஸ்ரேலியா | அத்தம் (கன்னி)
180 செ.மீ

**23839 | கோ | 1988**
வேலணை | A/L
Bakery Business
விசாகம் (விருச்சிகம்)
170 செ.மீ | இந்து

**22627 | வே | 1989**
மட்டக்களப்பு | இந்து | A/L
Fabricator | அவுஸ்ரேலியா
பூசம் (கடகம்)
172 செ.மீ | செவ் : 02

**22546 | வே | 1989**
ஆவரங்கால் | இந்து | A/L
Contractor | பிரான்ஸ்
அனுஷம் (விருச்சிகம்)
182 செ.மீ

**22050 | வே | 1989**
வண்ணார்பண்ணை | இந்து
A/L | Own Business
திருவாதிரை (மிதுனம்)
172 செ.மீ | சூ.செவ் : 02

**20136 | வே | 1989**
நீர்வேலி | இந்து | BSC,MSC
& PHD | Admin Manager
South Korea | சுவாதி (துலாம்)
172 செ.மீ | சூ.செவ் : 10

**23806 | வே | 1989**
கோண்டாவில் | இந்து
MBBS | Doctor
மூலம் (தனுசு)
180 செ.மீ | செவ் : 07

**23824 | ந | 1989**
முல்லைத்தீவு | இந்து
BA | Graduate Teacher
அஸ்வினி (மேடம்)
168 செ.மீ | செவ் : 07

**22606 | கோ | 1990**
பருத்தித்துறை | இந்து | BD,
Reading MBA | Executive
Manager | அவிட்டம் (கும்பம்)
180 செ.மீ | செவ் : 02

**22621 | கு | 1990**
வேலணை | இந்து | B.Eng,
MSC | Manager
உத்தராடம் (மகரம்)
160 செ.மீ | செவ் : 04

**23005 | வே | 1990**
அல்வாய் | இந்து | A/L
Own Business
பூரம் (சிம்மம்)
185 செ.மீ

**22633 | வே | 1992**
கரவெட்டி | இந்து | NVQ
Technican Officer
ரோகிணி (ரிஷபம்)
180 செ.மீ

**22639 | வே | 1992**
நெடுந்தீவு | இந்து | NVQ
Assistant Engineer
பூரட்டாதி (கும்பம்)
167 செ.மீ | செவ் : 01

**23854 | வே | 1993**
இளவாலை | இந்து | BSC
Software Engineer
அத்தம் (கன்னி)
179 செ.மீ | செவ் : 01

**22612 | வே | 1994**
மட்டக்களப்பு | இந்து
A/L | Gym Coach Trainer
கார்த்திகை (ரிஷபம்)
160 செ.மீ

**19599 | வே | 1995**
வவுனியா | இந்து | HND,
Reading MSC| Grama
Sevagar | புனர்பூசம் (மிதுனம்)
175 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22360 | வே | 1982**
கோண்டாவில் | Divorced
Diploma | Teacher
அத்தம் (கன்னி) | இந்து
175 செ.மீ | செவ் : 01

**22642 | கோ | 1986**
மல்லாகம் | இந்து
MBA | Executive
திருவாதிரை (மிதுனம்)
153 செ.மீ | செவ் : 02

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | BSC,
MSC | Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து
MBBS & MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து | Reading
Music Course | Studying
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**22200 | ப | 1991**
சுன்னாகம் | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | செவ் : 01

**22249 | கு | 1991**
சித்தங்கேணி | இந்து | BSC
Graduate Trainee
அஸ்வினி (மேடம்)
149 செ.மீ | செவ் : 12

**22167 | சாண் | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் சிம்மம்
165 செ.மீ | சூ.செவ் : 09

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து | A/L
Searching for a Job
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ் : 01

**22618 | சாண் | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
A/L | Cake Designer
பூசம் (கடகம்)
167 செ.மீ | செவ் : 01

**22197 | வே | 1993**
நீர்வேலி | இந்து | HNDA,
CIMA | Searching for a Job
உத்தராடம் (மகரம்)
162 செ.மீ | செவ் : 02

**22158 | வே | 1993**
அல்வாய் | இந்து |
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
163 செ.மீ

**22660 | கோ | 1994**
அச்சுவேலி | இந்து | BFA
Searching for a Job
மூலம் (தனுசு)
159 செ.மீ | சூ.செவ் : 12

**23827 | வே | 1994**
வேலணை | இந்து | BSC
Project Manager | கனடா
உத்தரம் (சிம்மம்)
156 செ.மீ

**22513 | வே | 1994**
மானிப்பாய் | இந்து | BD
Marketing Executive
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ

**22104 | வே | 1994**
அளவெட்டி | இந்து | Diploma
in Beautician | Proprietor
பூராடம் (தனுசு)
156 செ.மீ

**23809 | வி | 1995**
மட்டக்களப்பு | இந்து | Bachelor
in Teaching | Teacher
பூசம் (கடகம்)
165 செ.மீ | செவ் : 04

**23860 | வே | 1995**
காரைநகர் | இந்து | LLB
Software Engineer
அனுஷம் (விருச்சிகம்)
174 செ.மீ | செவ் : 12

**22384 | வே | 1996**
ஏளாலை | இந்து | கனடா
MD | Doctor
சித்திரை (கன்னி)
165 செ.மீ

**22441 | வே | 1996**
திருநெல்வேலி | இந்து | HRM
Final | Staff Assistant
சித்திரை (கன்னி)
157 செ.மீ

**அருந்ததி பிரைவட் லிமிடட்**

**18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்**



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



# மருத்துவக் கதிர்



## குடல் புண்



உடலுக்கென்றே தனி கடிகாரம் இயங்குகிறது. அந்தந்த நேரத்திற்கு தகுந்தாற்போல் உடல் உள்ளுறுப்புகள் செயல்படும். சரியான நேரத்திற்கு அமிலம் சுரக்கும். அந்த சமயத்தில் வயிற்றில் உணவில்லையென்றால் அது வெறும் வயிற்றில் பரவி, குடலின் சுவர்களை அரிக்கத் தொடங்கும்.

இதனைத் தவிர்த்து வேறு காரணங்களாலும் வயிற்றுப் புண் உண்டாகும். புகைப்பிடிப்பவர்களுக்கு, புகையிலை பயன்படுத்துபவர்களுக்கு, வாயுக் கோளாறினால் அவதிப்படுபவர்களுக்கு, அதிக ஸ்ட்ரெஸினால் இருப்பவர்களுக்கு, காலை உணவை தவறு விடுபவர்களுக்கு, எப்போதும் சுயிங்கம் மெல்பவர்களுக்கு, என இவர்களுக்கெல்லாம் அல்சர் தாக்கும் ஆபத்து உள்ளது.

வேலைக்குச் செல்லும் ஆண்கள் மற்றும் பெண்கள் பலர், காலை உணவைச் சாப்பிடத் தவறுவதால், பலரும் வயிற்றுப் புண் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நோயின் முதல் அறிகுறி நெஞ்சுப் பகுதியில் எரிச்சல் ஏற்படுவதுதான். இதைத் தொடர்ந்து அடிக்கடி புளித்த ஏப்பம் உண்டாகும். பசி இல்லாமல் இருக்கும். குறைந்த அளவு உணவைச் சாப்பிட்ட உடனேயே, வயிறு நிரம்பிவிட்ட உணர்வு உண்டாகும். பிறகு, வயிற்றில் வலி தோன்றும். அத்துடன் வாந்தியும் வரும்.

### வயிற்றுப்புண்ணின் வகைகள்

1. வாயிலிருந்து இரைப்பைக்கு செல்லுகிற வழியில் உணவுக்குழாயில் தோன்றும் ஒரு விதமானது.

2. இரைப்பை கீழ்ப்பகுதி மேற்பகுதி என இரண்டாகப் பிரித்து வழங்கப்படுகிறது. இரைப்பைக்குச் செல்லும் உணவை சமிபாடடையச் செய்து, சமிபாடடைந்த பகுதியையும் முன் சிறுகுடலுக்கு அனுப்பும் தொழிலில் ஈடுபட்டிருப்பது இரைப்பையின் கீழ்ப்பகுதிதான். இது கீழ்வயிறு என்று குறிக்கப்படும். கீழ் வயிற்றில் தோன்றும் புண் 'காஸ்டிரிக் அல்சர்' எனப்படும்.

3. இரைப்பை ஏதேனும் ஒரு காரணத்தில் சேதமடைவதுண்டு. அது சேதமடைந்தால் இரைப்பையின் மேற்பகுதியில் புண் தோன்றுவதுண்டு. உணவுப் பாதையில் தோன்றும். கீழ் வயிற்றுப் புண் வேறு. மேல் வயிற்றுப்புண் வேறு. இரண்டும் வேறு வேறு காரணங்களால் தோன்றுகிறது.

4. சிறு குடல் மிக நீளமானது. வளைந்து வளைந்து இருப்பதனால் அது மிகச்சிறிய இடத்தில் அடங்கி இருக்கின்றது.

5. சிறுகுடலின் முன்பகுதி வயிற்றை அடுத்து இருக்கிறது. இது வடிவில் ஆங்கில எழுத்து R (U) போன்றது.

6. இந்த முன்பகுதி ஆங்கிலத்தில டுயோடனம் எனப்படும். இங்கு ஏற்படும் புண்ணைத்தான் முன் சிறுகுடல் புண் என்கிறோம்.

7. இரைப்பையில் சுரக்கும் காஸ்ட்ரிஜூஸ் என்னும் புளிப்புள்ள ஒரு செரிப்பு நீரின் கோளாறினால் கீழ் வயிற்றுப் புண்ணும், முன் சிறுகுடல் புண்ணும் தோன்றுகின்றன.

8. இந்த ஒற்றுமை பற்றி இரண்டும் பெப்டிக் அல்சர் என வழங்கப்படுகிறது. புளிப்புள்ள திரவம் அல்லது நீர் பொருள் அமிலம் (Acid) பெப்டிக் என்ற ஆங்கில சொல்லுக்கு ஜீரணிக்கின்றது என்பது பொருள்.

9. பெப்ஸிஸ் என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஜீரணம் என்பது பொருள். அந்தச் சொல்லில் இருந்து திரிந்ததே பெப்டிக் என்ற சொல் தோன்றியது.

10. ஜீரணமாகாத கோளாறினால் ஏற்படும் ஆறாத புண்ணையே அல்சர் என்கிறோம்.

இரைப்பையில் காஸ்டிரிக் அமிலம் என்ற புளிப்பு நீர் சுரந்து சில சத்துக்களை இங்கே சேகரிக்கும் நிலைக்கு கொண்டு வருகின்றன. காஸ்டிரிக் சுரப்பு நீருக்கு உதவுவன பெப்ஸின், ரெனின் என்ற இரு நொதியத்தினால் புரதங்கள் பெப்டோனாக (Peptone) , இரைப்பையில் மாற்றப்படுகின்றன. இரைப்பையில் சேர்ந்துள்ள எல்லா பொருள்களும் பாகுபோலாகி முன் சிறுகுடலுக்கு சிறிது சிறிதாக செல்லுகின்றன. காஸ்டிரிக் அமிலம் சில காரணங்களால் சுரக்க வேண்டிய அளவுக்கு அதிகமாக சுரக்கிறது. மிகுதியாக உள்ள இந்த அமில நீர் இரைப்பையிலிருந்து முன் சிறுகுடலுக்கு செல்கிறது. அங்கு ஏதேனும் ஒரு காரணத்தால் சிறிய புண் ஒன்று தோன்றி இருந்தால் அதனை இந்த நீர் ஆறாமல் இருக்கும். இதுதான் குடல் புண் எனப்படும்.

### சிறு குடலில் ஏற்படும் புண்ணுக்கு கீழ்க்கண்டவை காரணங்களாகும்

நெருப்புக் காய்ச்சல், காசநோய், பெருங்குடல் புண்ணுக்கு குடல் புழுக்கள் மற்றும் அமீபாவின் தாக்குதல்.

இரைப்பை புண் ஏற்பட்டால் வயிற்றில் வலி ஏற்படும், வயிற்று எரிச்சல் ஏற்படும், சிலருக்கு வாந்தி ஏற்படும். குடல் புண்ணை கவனிக்கவில்லை என்றால் புண் அதிகமாகி இரத்த வாந்தி ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. சில சமயம் கறுப்பாக மலம் கழிப்பார்கள்.

* பற்றீரியா தொற்று (Helicobacter pylori)
* மன உளைச்சல்
* அதீத கவலை
* தவறான உணவுப் பழக்கம்
* சில வகை மருந்துகளை உட்கொள்வது
* அதிகமாக தேநீர், கோப்பி குடிப்பது

மசாலா, கார உணவுகளை அதிகமாக சாப்பிடுவது போன்ற பல்வேறு காரணங்களால் அல்சர் ஏற்படுகிறது.

மேற்கண்ட நோய் அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக மருத்துவரின் ஆலோசனை பெறுவது நன்று.

### வயிற்றுப்புண் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய உணவுகள்

சோடா மற்றும் குளிர்பானங்களுக்கு முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். அதில் உள்ள சிட்ரிக் அமிலம் வயிற்றின் அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. இதனுடன் சமிபாட்டுக் கோளாறுகளையும் உண்டாக்குகிறது. குறிப்பாக, மதுப்பழக்கம் உள்ளவர்கள், குடிப்பதை நிறுத்த வேண்டும். இந்தப் பழக்கம் நோயைத் தீவிரமாக்கும். அதுமட்டுமல்ல வயிறு மற்றும் சிறுகுடலில் கடுமையான எரிச்சல் ஏற்பட்டு, வீக்கம் கூட உண்டாகலாம்.

இறைச்சியை உணவில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இதில் அதிக அளவில் புரதம் மற்றும் கொழுப்பு நிறைந்துள்ளதால், உணவு சமிபாடடைய நீண்ட நேரம் எடுக்கும். அதனுடன் நோயின் வீரியத்தையும் அதிகப்படுத்தும்.

காரமான உணவுகள், மசாலா அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடுவதால், அல்சர் பிரச்சினை அதிகரிக்கும். வயிற்றுப் புண்ணால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த உணவுகளை எடுத்துக் கொள்ளும்போது, கடுமையான வயிற்று வலி ஏற்படும். அதனால், மிளகாய், மிளகு, மிளகாய்ப் பொடி ஆகியவற்றை சேர்த்துக் கொள்ளாமல் தவிர்ப்பது நல் லது.

கோப்பியில் உள்ள கெஃபைன், வயிற்றின் அமிலத் தன்மையை அதிகரிப்பதால், வயிற்றுப் புண்ணால் அவதிப்படுபவர்கள் காபியைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும். கடுமையான வயிற்று வலி ஏற்படுவதோடு, நோயின் தீவிரத்தையும் அதிகமாக்கிவிடும். கெபைன் அதிகமாக இருக்கும் கோப்பி, தேநீர், சொக்லேட், ஐஸ் கிறீம் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

### சாப்பிட வேண்டிய உணவுகள்

* நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள், பழங்களைச் சாப்பிடுவதால் செரிமான மண்டலம் சீராகச் செயல்படும். உணவுகளும் எளிதாகச் செரிமானமாகும். நாள் ஒன்றுக்கு 2 கப் அளவுக்கு நார்ச்சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடுவதால் வயிற்றுப்புண் வராமல் பாதுகாக்கலாம்.

* தயிரில் உள்ள நன்மை தரும் பக்டீரியாக்கள், கெட்ட பற்றீரியாக்களின் வளர்ச்சியைத் தடுத்து, நோயைக் குணப்படுத்த உதவுகிறது. தயிரை வாரத்துக்கு 3 முறை சாப்பிட்டுவர, சிறந்த பலன்களைப் பெறலாம்.

* முட்டைக்கோஸில் உள்ள குளூட்டமைன் (Glutamine), வயிற்றுப்புண்களை எதிர்க்கும் தன்மையுடையவை. இதனால் வயிற்றுப்புண்கள் வராமல் தடுக்கலாம்.

* திராட்சைப் பழங்களை ஜூஸாக செய்து, வாரத்துக்கு மூன்று முறை அருந்தலாம்.

* பூசணிக்காயின் சதைப்பகுதியை எடுத்து, அதனுடன் ஏலக்காய் ஒன்று, தேவையான பனங்கற்கண்டு சேர்த்து வெறும் வயிற்றில் 48 நாள்கள் குடித்து வர, நோய் குணமாகும் வாய்ப்புகள் அதிகம்.

* புதினா ஜூஸ், புதினா துவையல் என ஏதாவது ஒரு வகையில் புதினாவைச் சேர்த்துக்கொள்வது நல்லது.

* வாரத்துக்கு 3 நாள்கள், ஒரு டம்ளர் அளவுக்கு வெறும் வயிற்றில் தேங்காய்ப்பால் குடித்து வரலாம். ஒரு பெரிய ஸ்லைஸ் தேங்காயை நன்றாக மென்று விழுங்குவது நல்லது.

* மணத்தக்காளி கீரை சூப், மணத்தக்காளி கீரை, மணத்தக்காளி கூட்டு என ஏதாவது ஒருவகையில் கீரையைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

* பாசிப் பருப்பு சேர்த்து கீரைக் கூட்டு செய்து, ஒரு கப் அளவுக்கு தினமும் சாப்பிட்டு வரலாம்.

* முள்ளங்கி, புடலங்காய், பூசணிக்காய், தர்பூசணி, வெள்ளரிக்காய், நுங்கு, இளநீர் ஆகிய நீர்ச்சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடுவது நல்லது.

## சித்த மருத்துவக் குறிப்புகள் சில .....

*** நெஞ்சு சளி பிரச்சினைக்கு:-** தேங்காய் எண்ணையில் சிறிதளவு கற்பூரம் சேர்த்து நன்கு கொதிக்கவைத்து அவை ஆறியதும் நெஞ்சில் தடவ நெஞ்சி சளி குணமாகும்.

*** தலைவலி குணமாக:-** 10 துளசி இலை, சிறுதுண்டு சுக்கு மற்றும் 2 லவங்கம் ஆகியவற்றை நன்கு அரைத்து நெற்றியில் பத்தாக போட்டால் தலைவலி குணமாகும்.

*** தொண்டை கரகரப்பு குணமாக :-** சுக்கு, வெள்ளை மிளகு மற்றும் திப்பிலி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

*** தொடர் விக்கல் குணமாக :-** நெல்லிக்காயை இடித்து சாறு எடுத்து தேனில் கலந்து சாப்பிட தொடர் விக்கல் குணமாகும்.

*** வாய் நாற்றம் குணமாக :-** சட்டியில் படிகாரத்தை போட்டு நன்கு காய்ச்சி, ஆறவைத்து தினமும் மூன்று வேலை சாப்பிட வாய் நாற்றம் குணமாகும்.

*** உதட்டு வெடிப்பு குணமாக :-** கரும்பு சக்கையை எரித்து சாம்பல் எடுத்து அதை வெண்ணையில் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு பிரச்சினைகள் குணமாகும்.

*** செரிமானம் நன்கு அடைய:-** ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பில்லை, இஞ்சி மற்றும் சீரகம் ஆகியவற்றை நன்கு கொதிக்க வைத்து, ஆறியதும் வடிகட்டி குடிக்க செரிமானம் நன்கு அடையும்.

*** வயிற்று வலி குணமாக பாட்டி வைத்தியம் :-** வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து, தேனில் கலந்து சாப்பிட வயிற்று வலி குணமாகும்.

*** மலச்சிக்கல் குணமாக பாட்டி வைத்தியம் :-** செம்பருத்தி இலையை காய வைத்து பொடி செய்து தினமும் சாப்பிட மலச்சிக்கல் குணமாகும்.

*** சீத பேதி குணமாக பாட்டி வைத்தியம் :-** தினமும் மாலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் கலந்து சாப்பிட்டு வர சீத பேதி குணமாகும்.

*** பித்த வெடிப்பு குணமாக பாட்டி வைத்தியம் :-** கண்டங்கத்திரி இலைசாறை ஆலிவு எண்ணையில் காய்ச்சி தினமும் பூசி வர விரைவில் பித்த வெடிப்பு குணமாகும்.


# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 08th of May 2022


We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## Describe the picture



1) Where does the scene take place? It.....
2) How many people are in the picture? There are...
3) How many are in the foreground?
4) When does the scene take place? Refer to the season and time of the day. Mention what the weather is like.
5) Describe the path.
(On the left or in the middle... Straight or winding...)
6) What are the two boys in the foreground doing?
7) How do they look? (miserable or happy)
8) What is happening in the pond and beside the pond?
9) Who is under the tree and what are they doing?
10) There are two people on the path. What is each one doing?
11) What is strange about the cat and the dog?

### *01. A- Fiil in the blanks in these sentences with the words opposite in meaning to ones in full capital.*

1 . Kamal **BROKE** my toy; Ravi will ............it for me.
2. My uncle will **SELL** his old car and.......... a new one .
3. When her cousin came Anita was **HAPPY** ; when she left she was ................
4. The playground is **NOISY** but the library is ..............
5. A snail creeps **SLOWLY** but a deer runs ...................
6. The price of mutton is **DEAR** but the vegetables are ............
7. My grandpa is **OLD** but my uncle is ................
8. The night is **DARK** but the day is ...................

ANSWERS
1-mend 2. buy 3. sad 4. quiet. 5. fast 6. cheap 7. young 8. bright.



### *02.Fill in the blanks with the correct adverbs.*

1 The fire spread so ............... that the house burnt down to ashes.
2. The ship arrived .................. after a stormy voyage.
3. John wrote his exercise very .............................................
4. Tharshan jumped over the wall .........................................
5. It was raining too................. for us to go out.
6. The parents looked ............ at their daughter dancing at the party.
7. The children were reading ............... in the library.
8. Our teacher treats all the students ...................................
9. The old lady nodded her head .................................
10.The farmer walked home .................... after a day's hard work.

Answers:
1. quickly / safely / 3. neatly /4. easily / 5.heavily / 6 proudly / 7 quietly / 8 kindly / 9.sleepily / 10. wearily

### *A Complete each sentence with an adjective from the list on the left and a preposition from the list on the right. You must use each adjective once only but you can use each preposition more than once.*

| | | |
|---|---|---|
| accustomed | famous | relevant |
| afraid | full | responsible |
| ashamed | good | sensitive |
| aware | jealous | typical |
| capable | proud | |
| dependent | ready | |

at
for
of
on
to



1. She was ............. her friend because she had a better dress.
2. The waste paper bin was ............. crumpled sheets of paper.
3. This computer is ............. producing sophisticated graphics.
4. The town is especially ............. its elegant architecture.
5. I felt very ............. making such a stupid mistake.
6. After weeks of preparation the hall is nearly ............. the grand opening.
7. Could you add this up for me? I'm not very ............. maths.
8. Who is ............. writing those words on the wall?
9. She was so ............. her nephew's achievement that she couldn't stop talking about it.
10. It took some time to get ............. the slower pace of life in the country after the frantic atmosphere of the town.
11. We try to eat food which is ............. the region in which we are travelling.
12. Are you ............. any reason why he should be late?
13. They built nuclear power stations so as not to be ............. coal as their main source of energy.
14. This is not really ............. our discussion so can we get back to the main point of the meeting?
15. He sleeps with the light on because he's ............. the dark.
16. Be careful what you say to Scott. He's very ............. criticism and sulks for days.

Answers:
1. jealous of
2. full of
3. good at
4. famous for
5. ashamed of
6. ready for
7. good at
8. responsible for
9. proud of
10. accustomed to
11. typical to
12. aware of
13. dependent on
14. relevant to
15. afraid of
16. sensitive to

**Lack of intelligence is the greatest poverty - Arabic Wisdom**

# Tennis

Tennis is a game which is played either by 2 or 4 players. Tennis Day is officially celebrated on 23rd February since the year 1874. The game is also known as "Grass Tennis." Earlier, the game was played by using hands but then people started using rackets to enhance the fun of the game. Tennis is also extended to Lawn tennis as it can also be played outdoors. In this essay, we will know about tennis in detail and know some interesting facts. So let's get started!



Tennis is a sport which is played across the world. The game was first played in the 19th century in Birmingham, England. Tennis has many variations like Lawn Tennis and Table Tennis. Lawn tennis is played outdoors in an open lawn whereas table tennis is an indoor game played with two people across a common table.

You can play tennis in singles and doubles. In singles, there are 2 people opposite each other, and in doubles; there is a team of 2 people facing each other. The game tennis is played by both teens as well as adults. Like any other outdoor sport, tennis also helps in keeping you fit and healthy. As it is a physically demanding sport, it helps in increasing your strength and endurance.

There is another name for tennis which is called "grass tennis." In the 11th century, the major parts of France played a similar game with their hands and called it Jeu de Paume. Later in the 15th century, people started using rackets and now the game is known as tennis. In the year 1873, a man named Major Walter Wingfield invented a version of this game and was first introduced in Wales, United Kingdom.

To play this sport, you need a racket and a tennis ball. The tennis ball is light in weight, empty, and round. The ball is hit by the racket across the net in the competitor's field. If the competitor misses the shot, the other player earns a point.

The player who scores the first 4 points wins the game and to win a set, you need to win 6 games. To win a match, you need to win at least 2 sets. Most of the matches are played as best of three or best of five sets. To win the best of 3, you need to win 2 sets and for the best of five, you need to win 3 sets.

There are many famous personalities in the arena of tennic such as Roger Federer, Rafael Nadal, Novak Djokovic, Serena Williams, Sania Mirza, Leander Paes, and many more. This game is also played in the Olympic Tournament, US Open, Australia Open, Wimbledon Championship, etc.

Tennis requires many mastery skills and an adequate amount of strength and stamina but the most important skill required to play this game is the service. Your serve can decide the speed, swing, and direction of the ball. If you master this skill your chance of winning the game will automatically increase.

A player can earn a huge amount of money by playing tennis as it is a famous sport all around the world. You can get a chance to get recognized worldwide and many endorsements will reach out to you for advertisement and promotion purposes too. If you are a sports lover, then tennis is a good option for establishing a career with high scope.

Tennis is a worldwide famous game played in different countries. It is an outdoor game played in the lawn between 2 or 4 people. The other name of tennis is Lawn Tennis. It was first introduced in the 19th century by Major Walter Wingfield. It is a physical sport which means you need strength, stamina and technique to play this sport. It is played with the help of a racket and a tennis ball.

Tennis is an Olympic game and many players have competed in Tennis at an international level like Roger Federer, Serena Williams, Rafael Nadal, and many more. There is no age criteria to play sports as teens as well as adults can play tennis at tournament level.

Some of the tournaments held for tennis are Wimbledon Cup, Australia Open, Olympic Games, French Open, and many more. The sport requirs technique and strength and if you got both then the chances of you to win the game are very high.

# Playing a musical instrument



Playing a musical instrument is a great hobby to have. I started playing the piano when I was five years old and still really enjoy it now: it's a perfect way to relax and cheers me up when I'm feeling down. When I lived at home with my parents, we had a lovely reddish brown piano in the house and I had piano lessons every week. However, when I went to university, I had to leave my family, my home and my piano behind.

I missed playing the piano so much that I spent all the money I got for my eighteenth birthday on a brand new electric piano. It was quite difficult getting it from the music shop to my house: I had to take a friend with me to get it into a taxi and then carry it to the door. I am very glad I bought it though. I was able to play whenever I wanted, using headphones so that I wouldn't disturb my flatmates. When I was studying or writing an essay, I used to take a break to play something energetically. It really helped ease my frustration! When I was feeling a bit homesick, playing music that I learned on my old piano made me feel better.

Now I am on my year abroad and unfortunately I don't have a piano any more. I still listen to a lot of classical music by my favourite composers like Beethoven and Chopin. I find that, especially when I'm listening to a tune that I can play, I feel nostalgic for the piano keyboard. You can really get attached to a musical instrument because playing music involves lots of emotion. I wish that pianos were as portable as guitars and trumpets because I really miss spending time on my hobby. Never mind, there are other creative activities that I can do to relax, like drawing or writing stories. When I go home for Christmas, I will drive my family mad because I will play the piano all the time. It probably won't sound very nice because I haven't had any practice!

# Why Is Painting Fun For Everyone?

We all have a hobby in which we choose to invest both time and money. Some hobbies are more expensive; also, some remain only hobbies, while others may turn into a profession.

One of the oldest hobbies, which is quite popular nowadays, is painting. Why? Because it is a fun activity that stimulates the imagination and relaxes the brain.

The benefits that painting brings into our lives



1. Communication - Art makes us more humane; it helps us to communicate using a different and personal language. This is a wonderful thing for all people and especially for those who have trouble with self-expression.

2. Therapy - Painting is an individual activity that may take place in different locations; painters enter their own world, a world full of possibilities. Creative stimuli help them to break away from reality, which is a great escape from everyday stress, resulting in relaxation and well-being.

3. Mental Health - Painting helps us to disconnect from problems, stay away of anxiety and even turn it into something beautiful. It helps us identify our feelings.

7. Brain Capacity - Painting and drawing stimulates both the left hemisphere and the right hemisphere of the brain. The first is related to the rational part, the logical elements, while the second maximizes creativity and emotions.

As you can see, there are so many benefits to painting. Check it out for yourself and gather some friends and sign up for a fun paint and sip class at Pinot's Palette.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# காளியிடம் வரம் பெற்ற கதை

சுமார் நானூற்று எண்பது வருடங்களுக்கு முன் ஒரு சிற்றூரில் ஓர் ஏழை அந்தணக் குடும்பத்தில் பிறந்தான் தெனாலிராமன். இளமையிலேயே அவன் தன் தந்தையை இழந்தான். அதனால் அவனும் அவனுடைய தாயாரும் தெனாலி என்னும் ஊரில் வசித்து வந்த அவனுடைய தாய் மாமன் ஆதரவில் வாழ்ந்து வந்தனர். தெனாலிராமனுக்குப் பள்ளி சென்று படிப்பது என்பது வேப்பங்காயாகக் கசந்தது. ஆனால் மிகவும் அறிவுக்கூர்மையும் நகைச் சுவையாகப் பேசக்கூடிய திறனும் இயற்கையாகவே பெற்றிருந்தான். வீட்டுத்தலைவர் இல்லாத காரணத்தால் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை தெனாலிராமனுக்கு ஏற்பட்டது. அதனால் என்ன செய்வது என்ற கவலை அவனை வாட்டியது.

ஒருநாள் தெனாலி ஊருக்கு ஒரு முனிவர் வந்தார். அவர் இராமனின் நிலையைக்கண்டு அவனுக்கு ஒரு மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். அந்த மந்திரத்தை பக்தியுடன் ஜபித்தால் காளி பிரசன்ன மாவாள் என்றும் சொல்லிச் சென்றார். அதன்படியே இராமனும் ஊருக்கு வெளியே இருந்த காளி கோயிலுக்குச் சென்று முனிவர் கற்றுக் கொடுத்த மந்திரத்தை நூற்றியெட்டு முறை ஜெபித் தான். காளி பிரசன்னமாகவில்லை. இராமன் யோசித் தான். சட்டென்று அவனுக்கு நினைவுக்கு வந்தது. முனி வர் சொன்னது ஆயிரத்துஎட்டு முறை என்பது. உடனே மீண்டும் கண்களை மூடிக் கொண்டு காளியை ஜெபிக் கத் தொடங்கினான்.

இரவும் வந்து விட்டது. ஆனாலும் இராமன் காளி கோயிலை விட்டு அகலவில்லை. திடீரென்று காளி அவன் எதிரே தோன்றினாள். என்னை ஏன் அழைத்தாய்? உனக்கு என்ன வேண்டும்? என்று கோபமாகக் கேட்டாள் காளி. அவளை வணங்கி எழுந்த இராமன் கைகளைக் கூப்பித் தொழுதவாறே கேட்டான். தாயே நானோ வறுமையில் வாடுகிறேன். என் வறுமை அகலும் வழியும் எனக்கு நல்லறிவும் தரவேண்டுகிறேன். காளி பெரிதாகச் சிரித்தாள்.

உனக்குப் பேராசைதான். கல்வியும் வேண்டும் செல்வமும் வேண்டுமா? ஆம் தாயே. புகழுடையக் கல்வி வேண்டும். வறுமை நீங்கப் பொருள் வேண்டும். இரண்டையும் தந்து அருள் செய்ய வேண்டும். என்றான் இராமன். காளி புன்னகையுடன் தன் இரண்டு கரங்களை நீட்டினாள். அதில் இரண்டு கிண்ணங்கள் பாலுடன் வந்தன. அந்தக் கிண்ணங்களை இராமனிடம் கொடுத்தாள் காளி.

இராமா! இந்த இரண்டு கிண்ணங்களிலும் உள்ள பால் மிகவும் விசேடமானது. வலது கிண்ணம் கல்வி. இடது கிண்ணம் செல்வம். நீ ஒரு கிண்ணத்திலுள்ள பாலை மட்டுமே குடிக்க வேண்டும். உனக்கு எது மிகவும் தேவையோ அந்தக் கிண்ணத்தின் பாலை மட்டும் குடி என்றாள் புன்னகையுடன்.

இராமன் என்ன தாயே! நான் இரண்டையும் தானே கேட்டேன்.ஒரு கிண்ணத்தை மட்டும் அருந்தச் சொல்கிறாயே. நான் எதை அருந்துவது தெரியவில்லையே என்று சற்று நேரம் சிந்திப்பது போல நின்றான். பிறகு சட்டென்று இடது கரத்திலிருந்த பாலை வலது கரத்திலிருந்த கிண்ணத்தில் கொட்டிவிட்டு அந்தக் கிண்ணத்துப் பாலை மடமடவெனக் குடித்து விட்டுச் சிரித்தான். காளி திகைத்து நின்றாள்.

நான் உன்னை ஒரு கிண்ணத்திலுள்ள பாலைத் தானே குடிக்கச் சொன்னேன்! ஆம் தாயே, நானும் ஒரு கிண்ணத்துப் பாலைத்தானே குடித்தேன். என்றான். ஏன் இரண்டையும் ஒன்றாகக் கலந்தாய்? கலக்கக் கூடாது என்று நீ சொல்லவில்லையே தாயே!



காளி புன்னகை புரிந்தாள். இராமா! என்னையே ஏமாற்றி விட்டாய். நீ பெரும் புலவன் என்று பெயர் பெறாமல் விகடகவி என்றே பெயர் பெறுவாய். என்று வரம் தந்து விட்டு மறைந்தாள். இராமன் விகடகவி என்று சொல்லிப் பார்த்துச் சிரித்துக் கொண்டான். திருப்பிப் படித்தாலும் விகடகவி என்றே வருகிறதே என்று மகிழ்ந்தான்.

## தமிழ் படிப்போம் தம்பி

தமிழ் படிப்போம் தம்பி
தரணி யாள்வோம் தம்பி
அமிழ்தம் எங்கள் மொழியடா
அவளின் சேய்கள் நாமடா

அகரத்திலே தொடங்குவாள்
னகரத்திலே நிறைவாள்
உயிரெழுத்துப் பன்னிரண்டை
உயிரெனவே கொள்வாள்

மெய்யெழுத்துப் பதினெட்டாம்
உயிரும் மெய்யும் சேர்ந்திட்டால்
உயிர்மெய்கள் தோன்றுமாம்
அவை இருநூற்றிப் பதினாறாம்

ஆய்தம் என்றும் ஓரெழுத்தாம்
அதனோடு இணைந்திட்டால்
அன்னைத்தமிழாள்எழுத்து
இருநூற்றி நாற்பத்தேழாம்

குறிலும்நெடிலும் வைத்திருப்பாள்
குற்றெழுத்தும் வைத்திருப்பாள்
வல் மெல் இடை இனமென்று
வகைப்படவும் வைத்திருப்பாள்

தொல்காப்பியம் திருக்குறள்
தொடரும் சங்கப்பாடல்கள்
பல்விதமாய் அறிவுநூல்கள்
படைத்தாளெங்கள் தாயவள்

அவளைக்கற்கத் தொடங்கினால்
அவள்பெருமை புரியுமாம்
உலவும் அன்னை போலவே
உயர்ந்தமொழி இல்லையாம்

## என்ன மலர் நீ சொல்லு...!

நல்லவரின் மனசு போல
வெள்ளை மலர் நானே - எந்தன்
நறுமணத்தை விஞ்சியெழ
மலர்களேதும் உண்டோ?

கொடியினிலே நான்மலர்வேன்
கொத்துக் கொத்தாக - பெண்கள்
கூந்தலிலே நான் தவழ்வேன்
அழகுச் சரமாக

சின்னச் சின்ன மலராக
நானிருந்த போதும் - என்னை
அள்ளி அள்ளி முகராத
மனிதர்களும் உண்டோ

என்னைச் சுற்றி வண்டுகளும்
ரீங்காரம் பாடி
இனிமையான தேனையுண்டு
களி நடனம் புரியும்

அழகழகாய் எ(ன்)னைப் புகழும்
பாடல்களோ நூறு
இருந்த போதும் வீண்பெருமை
கொண்டதில்லை நானும்

என்னி தழ்கள் வெண்மையாக
இருப்பதனைப் போல - என்
இதயம் கூட வெள்ளையடி
சின்னஞ் சிறு பெண்ணே

இப்பொழுது சொல்லு பெண்ணே
என் பெயரை நீயும் - நீ
எடுத்துச் சொன்னால் உன்கழுத்தில்
மாலையாக விழுவேன்

அழகோடு நறிய மணம்
கொண்டு மாலை வேளை - நீ
இதழ்விரிக்கும் மல்லிகையாம்
இனிய மலர் தானே..?

- ஷெல்லிதாசன் -



## பூனை அண்ணா

எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைக் குடிக்கும்
நாற்காலியின் கீழ் படுக்கும்





காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# ஆந்தைகள் பற்றி அறிவோம்



ஆந்தை, ஸ்ட்றைஜிபோர்மெஸ் இனத்தைச் சார்ந்த பறவை. இது பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் **(Barn Owls)** ஆந்தைகள். ஆந்தைகள் முன் நோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், அலகையும் கொண்டவை. இதனால் பார்க்கும் திசையை மாற்றுவதற்கு முழுத்தலையையும் திருப்பவேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைகளிலும் 270 பாகைகள் வரை திருப்பவல்லது.

ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. அவற்றின் கண்களுக்கு சில அங்குலம் தூரத்திலுள்ளவற்றைக் கூட தெளிவாகப் பார்க்க முடியாதவை. எனினும், அவற்றின் பார்வை, மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பானது. பல ஆந்தைகள் முழு இருட்டிலும்



கூட ஒலியைப் பின்தொடர்ந்து வேட்டையாடக் கூடியவை.

facial disk கொறி ணிகளிடமிருந்து வரும் ஒலியைக் குவித்துக் காதுக்கு அனுப்ப உதவுகின்றன. ஆந்தைகளின் வலுவான நகங்களும் கூரிய சொண்டும் உண்பதற்கு முன் அவற்றின் இரைகளைத் துண்டுதுண்டாகக் கிழிப்பதற்கு உதவு கின்றன. சத்தத்தை அமுக்கும் தன்மையுள்ள அவற் றின் சிறகுகளும் மங்கலான இறகுகளும் அவை சத்த மின்றியும் காணப்படாமலும் பறப்பதற்கு உதவுகின்றன.

இவை காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் மரங்களின்மேல் அல்லது நிலத்தின்கீழ் உள்ள வளைகள், குகைகள், பாழடைந்த கட்டிடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின்றன. ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து 6 இன்ச்சிலிருந்து 28 இன்ச் வரையும், 1 kg முதல் 4 kg எடை வரையும் உள்ளன. பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையானவை. எனவே, இவை பறக்கும் போது சத்தம் கேட்பது இல்லை.



ஆந்தை முட்டைகள் கிட்டத்தட்ட கோளவடிவம் கொண்டவை. ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து பன்னிரெண்டு வரையிலான முட்டைகளை இடுகின்றன. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயோ முட்டையிடும். இவை அடைகாக்கும் 15 முதல் 35 நாள்களில் குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கின்றன.

இதன் நடத்தை, இவற்றின் உணவுப் பழக்கம் பற்றி ஆராயும் விஞ்ஞானிகளுக்கு உதவுகின்றது. உயிரியல் பாடங்களின்போது பகுத்தாய்வதற்கு மாண வர்களுக்கு உதவுவதால், சில நிறுவனங்கள், இந்த உருண்டைகளைச் சேகரித்துப் பாடசாலைகளுக்கு விற்பனை செய்கின்றன.



## உங்களுக்கு தெரியுமா?

1. இசைக்கருவிகளுள் ஒன்றான வீணையில், ஏழு தந்திக்கம்பிகள் உள்ளன
2. சிலந்தி ஒரு மணி நேரத்திற்கு சுமார் 112 மீற்றர் வரை நூலை உருவாக்கும்
3. உலகில் முதன் முதலில் சைக்கிள் ரேஸ் நடந்தது பாரிஸில் 31.5.1868 இல் நடந்தது
4. ஜப்பான் டைப்ரைட்டரில் 2,863 எழுத்துக்கள் உள்ளன.
5. வீட்டு ஈயின் விலங்கியல் பெயர் மஸ்கா டொமஸ்டிக.
6. சோடியத்தின் சிறப்பு தண்ணீரில் எரியும்
7. சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் புதன்
8. சுறா மீனின் வாழ் நாள் 20 – 30 ஆண்டுகள்
9. ‘லிட்டில் கார்ப்பொரல்’ என்று அழைக்கப்பட்டவர் நெப்போலியன்
10. ‘வாசனைப் பொருள்களின் ராணி’ என அழைக்கப்படுவது, ஏலக்காய்
11. பிரிட்டனின் தேசிய மலர், ரோஜா
12. முதலைக்கு 60 பற்கள் உண்டு
13. யானையின் துதிக்கையில் சுமார் 40,000 தசைகள் உள்ளன
14. நமது மூளை ஏறக்குறைய 60 லட்சம் செல்களால் ஆனது
15. உலகில் மீன் இனம் தோன்றிசுமார் 50 கோடி ஆண்டுகள் ஆகின்றன
16. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் அம்பேத்கர்
17. கறுப்பு ஈயம்’ எனப்படும் தாது கிராபைட்.
19. காற்றிலுள்ள ஈரப்பதத்தைஅளக்கும் கருவியின் பெயர் ஹைக்கோ மீற்றர்.
20. முதலை சுமார் 7 m வரை வளரும்
21. பயங்கரமாக இருக்கும் கொரில்லா குரங்கு சைவ உணவை மட்டுமே உட்கொள்ளும்.
22. நீலத்திமிங்கலம் 300 ஆண்டுகள் உயிர் வாழும்
23. குறட்டை விடாத குரங்கு கொரில்லா
24. ஆமைக்கு பல் இல்லை
25. முள்ளம்பன்றியின் உடம்பில் ஏறத்தாழ 30,000 முட்கள் உள்ளன

## கல்விக்கதிர்



- அகரன் -

# மரபுத்தொடர் பற்றிய விளக்கம்

ஒரு சொல் அல்லது சொற்றொடர், அதன் நேர் பொருளை உணர்த்தாமல் தொடரும் பயன்பாட்டில் வழி வழியாக வேறு குறிப்புப் பொருளினைத் தந்து நிற்கும் போது அவற்றை மரபுத்தொடர் அல்லது மொழி மரபு அல்லது மொழி வழக்கு அல்லது இலக்கணத் தொடர் அல்லது சொல்லடை என்பர். பிறர் அல்லது முன்னோர் ஒரு குறிப்பிட்ட தகவலை அல்லது கருத்தை தெரிவிக்கப் பயன்படுத்திய சொற்தொடரை வழிவந்தோரும் பயன்படுத்துவதால் மரபுத்தொடர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

பொதுவாக வழங்கும் தொடர்களும், வட்டாரம் தோறும் – சமூகம் தோறும் சிறுசிறு வேறுபாட்டுடன் வழங்கும் தொடர்களும் ஆக தமிழில் ஆயிரக்கணக்கான மரபுத் தொடர்கள் உள்ளன. இந்த மரபுத்தொடர்கள் கருத்தழகும் நடையழகும் கொண்டவை.

### மரபுத்தொடர்களும் கருத்துக்களும்

* ‘இறக்கைகட்டிப் பறக்கிறது’ – விரைவாக செல்வது, அல்லது விரைவாக இயங்குவது
* ‘கதைகட்டி விடுதல்’ – தவறான ஒரு விடயத்தை ஏனையவர்களுக்கும் சொல்லி பரப்புதல்
* ‘பொட்டு வை’ – கொலை செய்: நெற்றியில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுதல்
* வெட்டு ஒன்று துண்டு இரண்டு – மிகவும் கண்டிப்பாக இருத்தல் அல்லது சொல்லுதல்

நாவை அடக்கு – அமைதியாக, எதுவும் பேசாமல் இருத்தல்
* இறந்த மொழி – பேச்சு வழக்கில் இல்லாத, அல்லது பாவனையில் இல்லாத மொழி
* மனப்பாரம் – மிகுந்த கவலை
* நெஞ்சு உடைதல் / மனம் உடைதல் – மிதமிஞ்சிய விசனமடைதல்
* மனதை உருக்கு – அனுதாபம் கொள்ளச் செய்
* வாலைச் சுருட்டிக்கொண்டு போதல் / இருத்தல் – பயந்துபோய் எதுவும் சொல்லாமல் போதல் / இருத்தல்
* அள்ளிக்குவித்தல் – அதிகமாக சம்பாதித்தல், சேர்த்தல்.
* அறைகூவுதல் – சண்டைக்கு போருக்கு அழைத்தல்.
* அறுதியிடுதல் – முடிவு செய்தல்
* அரை மனிதன் – மதிப்பற்றவன்
* அகட விகடம் – தந்திரம்
* அவசர குடுக்கை – பதற்றக்காரன்
* அறக்கப்பறக்க – விரைவாக
* அடாப்பிடி – கொடுஞ்செயல்
* ஆழமாய்ப் பறத்தல் – எப்படியேனும் அடைந்துவிடத் துடித்தல்
* ஆழம் பார்த்தல் – மனநிலை அறிதல்

### மரபுத்தொடர் வாக்கியங்கள்

* அந்த செல்வந்தர் ஏழைக் குடும்பத்தை கைதூக்கி விட்டார்.
* கண்ணன் தனது நண்பனுடைய செயலைக் கண்டு தலை கவிழ்ந்தான்.
* அவர் தனது குற்றத்தை பூசி மெழுகினார்.
* ஆசிரியர் மாணவர்களை தட்டிக் கொடுத்தார்.
* பாரதிதாசன் கவிதை உலகில் கொடிகட்டி பறந்தார்.
* நாங்கள் வாழையடி வாழையாக உழவுத்தொழில் செய்து வருகிறோம்.
* அவனுக்கு நடைமுறை அறிவு எதுவும் கிடையாது. அவன் ஒரு புத்தகப்பூச்சி.
* கண்ணன் வகுப்பறையில் முதலைக்கண்ணீர் வடித்தான்.
* உழைப்பை மதிக்காதவன் சாப்பாட்டுக்கு தாளம் போடுவான்.
* என் கனவு கானல் நீராகவே இருக்கின்றது.

# சிலப்பதிகாரத்திலிருந்து வேனில் காதை

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நல்நாட்டு
மாட மதுரையும் பீடுஆர் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்
அரைசுவீற்றிருந்த உரைசால் சிறப்பின்

மன்னன் மாரன் மகிழ்துணை ஆகிய
இன்இள வேனில் வந்தனன் இவன்என
வளம்கெழு பொதியில் மாமுனி பயந்த
இளங்கால் துதன் இசைத்தனன் ஆதலின்
மகர வெல்கொடி
மைந்தன் சேனை

புகர்அறு கோலம் கொள்ளும்என் பதுபோல்
கொடிமிடை சோலைக் குயிலோன் என்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற,
மடல்அவிழ் கானல் கடல்விளை யாட்டினுள்
கோவலன் ஊடக்
கூடாது ஏகிய

மாமலர் நெடுங்கண்
மாதவி விரும்பி
வான்உற நிவந்த மேல்நிலை மருங்கின்
வேனில் பள்ளி ஏறி மாண்இழை
தென்கடல் முத்தும் தென்மலைச் சாந்தும்
தன்கடன் இறுக்கும் தன்மைய ஆதலின்...

கொங்கை முன்றில்
குங்கும வளாகத்து
மைஅறு சிறப்பின் கையுறை ஏந்தி
அதிரா மரபின்
யாழ்கை வாங்கி
மதுர கீதம்
பாடினள் மயங்கி,
ஒன்பான் விருத்தியுள் தலைக்கண் விருத்தி...

நன்பால் அமைந்த இருக்கையள் ஆகி,
வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி
இடக்கை நால்விரல்
மாடகம் தழீஇச்
செம்பகை ஆர்ப்பே
 கூடம் அதிர்வே
வெம்பகை நீக்கும்
விரகுளி அறிந்து...

பிழையா மரபின்
ஈர்ஏழ் கோவையை
உழைமுதல் கைக்கிளை இறுவாய் கட்டி,
இணைகிளை பகைநட்பு என்றுஇந் நான்கின்
இசைபுணர் குறிநிலை எய்த நோக்கிக்
குரல்வாய் இளிவாய்க் கேட்டனள் அன்றியும்...

வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும்
உழைமுதல் ஆகவும் உழைஈறு ஆகவும்
குரல்முதல் ஆகவும்
குரல்ஈறு ஆகவும்

அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்...

நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி,
மூவகை இயக்கமும் முறையுளிக் கழிப்பித்
திறத்து வழிப்படும் தெள்ளிசைக் கரணத்துப்
புறத்துஒரு பாணியில் பூங்கொடி மயங்கி,
சண்பகம் மாதவி
தமாலம் கருமுகை...

வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த
அம்செங் கழுநீர்
ஆய்இதழ்க் கத்திகை
எதிர்ப்பூஞ் செவ்வி இடைநிலத்து யாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் தோட்டு
விரைமலர் வாளியின் வியன்நிலம் ஆண்ட...

ஒருதனிச் செங்கோல் ஒருமகன் ஆணையின்
ஒருமுகம் அன்றி உலகுதொழுது இறைஞ்சும்
திருமுகம் போக்கும் செவ்வியள் ஆகி,
அலத்தகக் கொழுஞ்சேறு அளை அயலது
பித்திகைக் கொழுமுகை ஆணி கைக்கொண்டு...

மன்உயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்இள வேனில் இளவரசாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கள் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுது
இடைப் படுப்பினும்...

தணந்த மாக்கள்
தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்உயிர் கோடல்
இறும்பூது அன்றுஅங்கு அறிந்த மின்என
எண்எண் கலையும் இசைந்துஉடன் போக
பண்ணும் திறனும்
புறங்கூறு நாவின்...

தளைவாய் அவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துஉரை எழுதி,
பசந்த மேனியள்
படர்உறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
தூமலர் மாலையின் துணிபொருள் எல்லாம்...

கோவலற்கு அளித்துக் கொணர்க ஈங்குஎன
மாலை வாங்கிய வேல்அரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற்கு அளிப்ப,
திலகமும் அளகமும் சிறுகருஞ் சிலையும்
குவளையும் குமிழும் கொவ்வையும் கொண்ட...

மாதர் வாள்முகத்து
மதைஇய நோக்கமொடு
காதலின் தோன்றிய கண்கூடு வரியும்,
புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயல்உலாய்த் திரிதரும் காமர் செவ்வியின்

பாகுபொதி பவளம் திறந்துநிலா உதவிய...

நாகுஇள முத்தின் நகைநிலம் காட்டி
வருகென வந்து
போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்,
அந்தி மாலை வந்ததற்கு இரங்கிச்
சிந்தை நோய் கூரும்என் சிறுமை நோக்கிக்...

கிளிபுரை கிளவியும்
மடஅன நடையும்
களிமயில் சாயலும் கரந்தனள் ஆகிச்
செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து
ஒருதனி வந்த உள்வரி ஆடலும்,
சிலம்புவாய் புலம்பவும் மேகலை ஆர்ப்பவும்...

கலம்பெறா நுசுப்பினள் காதல் நோக்கமொடு
திறத்துவேறு ஆயஎன் சிறுமை நோக்கியும்
புறத்துநின்று ஆடிய புன்புற வரியும்,
கோதையும் குழலும் தாதுசேர் அளகமும்
ஒருகாழ் முத்தமும் திருமுலைத் தடமும்...

மின்இடை வருத்த
நன்னுதல் தோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி உய்ப்பப்
புணர்ச்சிஉட் பொதிந்த கலாம்தரு கிளவியின்
இருபுற மொழிப்பொருள் கேட்டனள் ஆகித்
தளர்ந்த சாயல்
தகைமென் கூந்தல்...

கிளர்ந்துவேறு ஆகிய கிளர்வரிக் கோலமும்,
பிரிந்துஉறை காலத்துப் பரிந்தனள் ஆகி
என்உறு கிளைகட்குத் தன்உறு துயரம்
தேர்ந்துதேர்ந்து உரைத்த தேர்ச்சிவரி அன்றியும்,
வண்டுஅலர் கோதை மாலையுள் மயங்கிக் ...

கண்டவர்க்கு உரைத்த
காட்சி வரியும்,
அடுத்துஅடுத்து அவர்முன் மயங்கிய மயக்கமும்
எடுத்துஅவர் தீர்த்த எடுத்துக்கோள் வரியும்,
ஆடல் மகளே ஆதலின் ஆயிழை.
பாடுபெற் றனஅப் பைந்தொடி தனக்குஎன...

அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய,
மணித்தோட்டுத் திருமுகம் மறுத்ததற்கு இரங்கி
வாடிய உள்ளத்து வசந்த மாலை
தோடுஅலர் கோதைக்குத் துனைந்துசென்று உரைப்ப
மாலை வாரார் ஆயினும் மாண்இழை....

காலைகாண் குவம்எனக் கையறு நெஞ்சமொடு
பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தான்என்.

(வெண்பா)

செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்துஒழுக
மைந்தார் அசோகம் மடல்அவிழக் – கொந்தார்
இளவேனில் வந்ததால் என்ஆம்கொல் இன்று
வளவேல்நற் கண்ணி மனம்.

ஊடினீர் எல்லாம் உருஇலான் தன்ஆணை
கூடுமின் என்று குயில்சாற்ற – நீடிய
வேனற்பா ணிக்கலந்தாள் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கு
அலந்தாய் காண்

**பகிர்வு:- ஏரா மகள் சுமி -**

# தலை புதைக்கும் தீக்கோழிகள்...!

தோதல் ஒன்று வரும்போது
திரும்பி வரும் பேரின மதவாதங்கள்

மோதல் நெருப்பு மூட்டப்படும்
முழு இலங்கையும் எமக்கானதேயென
பரப்புரைகளும் மேலெழும்

காலி முகத்திடலில் ஒன்றுகூடி
ஹர்த்தால் போராட்டங்கள் செய்தவர்கள்
வாதங்கள் புரிந்து
வலுச்சண்டைகள் பல போட்டு
நாலாய் பிரிய
நயமான வேலைத்திட்டங்கள்
காசுகொடுத்து ஏற்பாடாகும்
கனவான்களின் மேற்பார்வையில்

போபோ என புறமொதுக்கப்பட்டவரும்
போபோ எனச்சொல்லி
கோங்கள் போட்டவரும்
வெற்றி வீரர்களாய்
வாக்குறுதிகளுக்கு வாக்களிக்கும்
மகா சனங்களின் வாக்குகளால்
வந்து குதிப்பர் அரங்கத்தில்.

முன்னைய கோபங்களையெல்லாம்
பின்னே தள்ளி
தமக்குள் பதவிப்பங்கீடுசெய்ய
வட்டிலப்பமுண்டு கனவான்கள்
சங்கமமாக

அப்பாவிச்சனமோ
இனியாவது விமோசனம்
ஏதாவது வரலாமென
கனவுகளில் மிதக்க

நாடு மீண்டும் டொலர்களுக்கு
கையேந்தி கடன் சுமையில்
மூழ்கி முக்குளிக்க
வழிசெய்தபடி
சுகபோகங்களுக்குள்
தலைபுதைக்கும் தீக்கோழிகளாய்
தலைவர்கள்..!

**- ஷெல்லிதாசன் -**

# கவலைக் கதிர்



## பறக்கும் பறவை நாமாவோம்

**சம்பூர் சமரன்**

**வானில் பறக்கும் பறவை நாம்
வாழ்த்துச் சொல்லி சிறகடிப்போம்
வையகம் மீது தினம் அலைவோம்
வண்ணம் சூடிய உடல் எடுத்தே**

**காசைப் பெரிதாய் எண்ணிக் கொண்டே
காலத்தை கடத்தும் மனிதர் அல்ல
கனிகளும் தானியமும் தேடி உண்டு
கனிவாய் பாடி நாம் மகிழ்வோம்**

**கூடித் திரிவோம் கவலையில்லை
கூட்டில் சேர்க்க பொருளுமில்லை
சோலை வெளிகளில் சுகம் காண்போம்
சோம்பலை துரத்தி வேளை விழிப்போம்**

**மரத்தின் கிளையில் வீடு கட்டி
மழையும் வெயிலும் எதிர்கொள்வோம்
மனதில் அன்பை விதை விதைத்து
மற்றவர் எல்லாம் சுற்றம் என்போம்**

## சிறுகதை

**அகலிகா பிரமி**

# பீனிக்ஸ் பறவை

எப்பவுமே நெருப்பில் கால் வைத்தவள் போல் நேரத்துடன் போட்டி போட்டபடி ஓடிக் கொண்டிருபவள் தான் அர்த்தனா, அவள் பெயர் போலவே வாழ்வையும் அர்த்தம் ஆக்கிக்கொள்ள முனைபவள்.

அன்று வானம் மேற்கில் உதிக்கும் என எல்லோருக்கும் வியப்பு! கிணற்றில் நீராடி விரித்த அவள் கார் மேகம் போன்ற கூந்தல் காற்றுடன் கதைபேச விட்டபடி நாற்காலியில் அமர்ந்து முத்தத்து மணலை அவள் முன் விரல்களால் தாலாட்டிக் கொண்டிருந்தாள். என்ன நினைத்தாளோ அமைதியாக இருந்தவள் வீதியோரம் விழியை வீசல் ஆனாள் ஏதோ ஒரு ஈர்ப்பு திரும்பவும் பார்க்கும்படி அவளை அழைத்தது என்னமோ கதிரை விட்டு எழுந்து கதவோரம் போனாள். மெல்லிய நீல வண்ண வானம் செங்கதிரை தனக்குள் மூடிக் கொள்ள கார் முகத்தை கட்டளையிட்டுக் கொண்டு இருந்தது. அருமை அருமை கிழக்கு வானம்தோற்றுப் போகும் கீழ்வானஅஸ்தமனம் பார்க்கையில் வீட்டை நோக்கி விரையும் புள்ளினம் கூட்டம் கூட்டமாய் கூடி உன்ண ஆயத்தமாகும் முலையூட்டிப்பறவைகள் சந்திரனை வரவேற்க சத்தமிடும் சில்வண்டுகள்..... தன்னை இழந்து கதவு தாண்டி வீதியின் ஓரங்களில் தன் விரல்களை மூடி ரசித்து கொண்டு இருந்தாள் அர்த்தனா. அவள் எண்ணம் போல் அவளும் அழகு இயற்கைக்குள் இனணந்த அவளை இயற்கை தன்னுள் இணைத்துக் கொண்டதோ என்னமோ தென்னம் கன்றுகளின் கீற்றுகளின் இடைவெளிகளில் கதிரவன் காணாமல் போய்க் கொண்டிருந்தான்.

மாலை ஆச்சு உள்ளே வா புள்ள அம்மா கூப்பிட்டாள் கேட்கவில்லை சத்தம்.... இருளப் போகுது இங்கே ஏன் புள்ள நிற்கிறாய் சிலையான அர்த்தனாவை சின்ன அண்ணன் தட்டிவிட்டான் நினைவுக்கு வந்தவள் இயற்கை மறந்து வீட்டிற்குள் வந்தாள். கண் மூடி விழித்தது போலிருந்தது சூரியன் அவள் அறைக் கதவை திறந்தான். பெண்ணே எழும்பு உனக்கான நேரம் முடிந்தது ஓடடி என்று.. இனி என்ன அர்த்தனா ஓட ஆயத்தமானாள். இவளைப் போல தன் குடும்பம் காக்க உழைக்கும் பெண்கள் இயற்கையை ரசிக்க நேரம் கிடைத்தால் அது ஆச்சரியம்தான் அவள் ஆயத்தமானாள்.

எட்டு அரை தாண்டினால் அவள் வாழும் தெருக்கள் தீக்குளிப்பு திருவிழா நடத்த ஆரம்பமாகிவிடும். அர்த்தனா. அதற்கு முன் தனக்கு இரக்கம் செய்யும் மரநிழல்களின் தயை கொண்டு கடமைக்கு விரைவாள். அன்று பணி நிறைவுறும் நேரம் பரபரப்பாய் அவளுக்குத் தெரியாமல் ஏதோ ஓர் ஆயத்தம் வாகனத்தில் செல்பவர்கள் கணக்கிடப்பட்டனர்.

பின்னர் அவளிடம் மேலாளர், அர்த்தனா மிஸ் இன்று உங்களின் வீட்டிற்கு வரலாம் என்று நினைக்கின்றோம் என்றார்? படுக்கையை நேசிக்கும் அவள் தகப்பனைக் காண என அவள் புரிந்துகொண்டாள். தாராளம் வாங்கோ! என்று புன்னகைத்தாள் அவள் வார்த்தையின் ஒத்தகருத்து அவள் இதயம் என்று யாரறிவார் நிறைந்த ஊழியர் பாரமாக பாதை கடந்தது வாகனம் அவளும் ஏறினாள்.

கூட்டமாக சேர்ந்தால் நாட்டுநடப்பு பேசுவது சகஜம்.... ஒருவர் அப்போ அக்கா வீட்ட இண்டைக்கு ரீ கிடைக்கும்!... பால்மா தட்டுப்பாட்டை நினைவு செய்தார் அவர். அர்த்தனா அதற்கு என்ன தாராளம் என்று புன்னகைத்தாள். இன்னும் பலர் பேசி சிரித்தபடி அவள் வாசல் கண்டது வாகனம். ஒருவர் பின் ஒருவர் இறங்கி நுழைந்தனர். மனம்கொண்டு வரவேற்றாள் வாங்கோ! உள்ளே வாங்கோ!

எப்பவுமே நாய்களை கண்டதே இல்லை போல் டேய் பப்பி செல்லம் வாடா என்று தானே ஒரு பெயர் வைத்து நடித்து குழைந்தார் ஒருவர்.

இன்னுமொருவர் ஓ... அர்த்தனா வீட்டில் தேசிய மரங்கள் இருக்கின்றன என ஆச்சரியப்பட்டார். அவள் வாழும் கிராமத்தில் மரம், செடி கொடி, வளரும் சாத்தியமில்லையோ என்பதுபோல் வினாக்குறி எழுப்பியது அவர் ஆச்சரியம். ஏற்கனவே அடுக்கி ஒழுங்கு படுத்தப்பட்ட நாற்காலிகள் அங்கே!! ஒவ்வொருவராக அமர்ந்துகொண்டனர் வருகையை அலைபேசியில் தெரிவித்திருப்பாள் போலும்.

சரி வந்த வேலை தந்தையை பார்ப்போம் என்று அறைக்குள் வரிசை இட்டனர். சிலரின் மௌன மொழிகள் அதிகம் பேசிக்கொண்டது தந்தையை தாண்டி இந்த விந்தை பெண்ணை வியக்க சிலர் விழித்தனர். எண்பத்தி ஐந்திலும் விழியில் ஒளி மாறவில்லை. சரிந்து படுக்கையில் போர்வைகளுடன் போர்வை போல் சாய்ந்து இருந்தார் விதானையார்.

எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்கத்தான் மனசு எல்லோருக்கும் பதில் சொல்ல அவருக்கும் விருப்பம் தான் கிராமம் அளந்த கிழவன் முனகிக் கொள்ள அர்த்தனா அவரைப் பிரதிபலித்தார் 85 இல் அவர் வீரன் ஆஸ்பத்திரியில் கண்டபடி தூக்கி கண்ட வயர் எல்லாம் போட்டு என்னுடைய அப்பாவை முறித்து விட்டனர் அப்பாவியாக யாரையோ குற்றம்சாட்டினாள். என் தந்தைக்கு இன்னும் 65 மில்லை என்பதுபோல் ஆதங்கம் தெரிவித்தாள். பேசியபடி மீண்டும் நாற்காலியில் அமர்ந்தனர் உத்தியோகத்தர்கள்.

அங்கிருந்த அம்மா இன்னும் தங்கை தனக்கென வாழா அட்சய பாத்திரமாய் அர்த்தனா......

தேனீர் பரிமாறப்பட்டது அங்கர் பால்மா உடன் மைலோ சுவையூட்டப்பட்டிருந்தது எப்படி இவளுக்கு முடிந்தது. இந்த விலை வாசியில் என்று சிலர் விழிகளில் மட்டும் வினவிவிட்டு அருந்தினர்.

பார்வை நேரம் முடிந்தது போகலாமா? தலைமையாளர் சைகைகளால் கட்டளையிட்டார். அரை மணி நேரம் இரவு உணவு ஆயத்தம் செய்கிறேன் என்றாள். அர்த்தனா தாராளம் என்பது அவள் அடிக்கடி சொல்லும் வார்த்தை மட்டுமல்ல அவள் விருந்தோம்பலிலும் என்று தெரிந்தது தயவாய் மறுத்து விடைபெற்றனர் ஊழியர்கள்.

படுக்கையில் விழிப்பான தந்தை, பக்கத்தில் நாள்களை எண்ணி ஏங்கும் தாய், தனக்கென வாழாமல் மெழுகு தீபமாய் அர்த்தனா இன்னும் எத்தனை பேசப்படாத முட்புதர் காடுகள் இருப்பினும் என்ன? ஊழியர்களுக்கு தெரிந்தது. அர்த்தனாவின் நீளக் கூந்தல், அழுத்தி உடுத்திய அழகிய புடைவை நேர்த்தி, சாயம் ஏற்றப்பட்ட உதடுகள், பேச்சில் எளிமை இப்படி வெளியரங்கம் மட்டுமே... எப்படியோ அந்தரங்கம் காணா இவளும் ஒரு பீனிக்ஸ் பறவை தான்.

# நளவெண்பா காதல் நயம்

**இலக்கிய நயம்**

**யாழ் மகள் சைந்தவி**

கண்ணொடு கண்ணிணை நோக்கி, உளம் மாறிப் புகுந்து காதலில் ஒன்றுபடுவது ஒருவகை. ஒரு மங்கை நல்லாளைப் பற்றியோ அல்லது ஆடவருள் உயர்வானவன் பற்றியோ மற்றொருவர் வாயிலாகக் கேள்வியுற்று ஒருவரை ஒருவர் காணாமலேயே காதல் வயப்படுவது இன்னொரு வகை. நிடத நாட்டு மன்னனான நளனுக்கும் விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்திக்குமுண்டான காதல் இவ்வகைப்பட்டதாம்!

**நீணிலத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்**
**தாணிறத்தால் பொய்கைத் தலம்சிவப்ப -**
**மாணிறத்தான்**

முன் தோன்றிய அன்னப்பறவை ஒன்றே நளன் தமயந்தி இருவரிடையும் காதல் பிறக்கக் காரணகர்த்தாவாயிற்று! அக்காதல் முளைவிட்ட சிறிது நேரத்திலேயே பெரும் மரமாகச் செழித்து வளர்ந்ததற்கும் அன்னத்தின் பங்கு மகத்தானதாகும்.

உன் இசைமுகந்த தோளுக்கு இசைவாள், வசையில் தமயந்தி என்றோதும் தையலாள், என்று நளன் உள்ளத்தில் பெருத்த ஆவலையும் ஆர்வத்தையும் காதலையும் ஏக்கத்தையும் தமயந்தி பால் எழுப்பி விட்டு விடுகின்றது. அந்த மட வன்னம்! (உனது புகழ் வாய்ந்த தோளுக்கு இசைந்தவள் குற்றமற்றவளான தமயந்தி எனப் பொருள்).

அன்னம் மொழிந்த சொற்கள் செவிவழியாகப் புகுந்து அவனுடைய மனத்தை அடைவதற்கு முன்பாகவே, தமயந்தி என்னும் மடந்தை நளனுடைய மனக்கோயிலினுள் புகுந்து அவனைத் தன் வசமாக்கிக் கொண்டு விட்டாள் என அழகுற விவரிக்கிறார் நளவெண்பா எனும் இந்நூலினை யாத்த புலவர் புகழேந்தியார்.

**அன்னம் மொழிந்த மொழிபுகா முன்புக்குக்**
**கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச் சொன்னமயில்**
**ஆர்மடந்தை என்றான் அனங்கன் சிலைவளைப்பப்**
**பார்மடந்தை கோமான் பதைத்து.**

மன்மதன் அம்புகளுக்கு இலக்காகி விட்ட நள மன்னன் துடிதுடித்து, யாரவள் அம்மடந்தை? எனக் கேட்கத் தலைப்பட்டான்.

இங்கு அவனுக்கு தமயந்தியைப் பற்றிக் கூறுகின்றது அன்னம். அவள் விதர்ப்ப நாட்டரசன் மகள், என அவளழகையும் குணங்களையும் கவினுற விவரித்து, மன்னன் ஆவலையும் காதலையும் பெருகச் செய்கின்றது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நான்கு பெண்மைக் குணங்களும் நான்கு வகைச் சேனைகளாகவும், ஐம்புலன்களும் ஐந்து நல்ல அமைச்சர்களாகவும், காற்சிலம்பொலியே முரசமாகவும், தன் கண்களே வேற்படையும் வாளுமாகக் கொண்டு முகமெனும் நிலா வட்டக் குடையின் கீழ் பெண்மை அரசு வீற்றுள்ள தன்மையுடையவள் தமயந்தி எனக் கூறுகின்றது அன்னப்பறவை.

**நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும்**
**நல்லமைச்சா**
**ஆர்க்கும் சிலம்பேஅணிமுரசா - வேற்படையும்**
**வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்**
**ஆளுமே பெண்மை அரசு.**

இப்படிப்பட்ட பெருமையுடைய மங்கையைக் கண்களால் காணாமலே அவளிடம் காதல் கொள்கிறான் நளன். இதில் ஆச்சரியமும் உண்டோ? அன்னத்தையே தன் காதலைச் சொல்ல அவளிடம் அனுப்புகிறான்.

மன்னன் மனத்தெழுந்த மையல்நோய் அத்தனையும் அன்னம் கூறியது கேட்ட பெண்மயிலாள் உள்ளமும் மன்னன் பால் எழுந்த காதலால் துடித்தது! அன்னமே! என் நிலையை அவரிடம் சென்று சொல்வாயாக! எனப் பதைத்தாள். அன்னமும் அவ்வாறே சென்று அவன்பால் அவள் காதலை உரைத்தது.

காதலர் இருவரும் ஒருவரை ஒருவர் காணாமலே வளரும் காதலுக்கு ஒரு பெருத்த இடையூறு வருகின்றது. சுயம்வரம் என்பதன் வடிவில்!

விதர்ப்ப நாட்டரசன் வீமன் தன் மகளுக்கு சுயம்வரம் நடத்தத் தீர்மானித்து எல்லா மன்னர்களுக்கும் செய்தி அனுப்புகிறான். நளனும் விதர்ப்ப தேசத்தை நோக்கி விரைகின்றான். தமயந்தியின் குணநலன்களைக் கேள்வியுற்ற தேவேந்திரனும்



மற்ற தேவர்களும் அந்த சுயம்வரத்திற்கு வருகின்றனர். அது மட்டுமன்றி, நளனையே தங்கள் தூதுவனாக தமயந்தி பால் அனுப்பி, எங்களில் ஒருவருக்கு மணமாலை சூட்டக் கூறுவாயாக, என்கின்றனர்.

காதல் திரைப்படங்களில் வருவது போல இது என்னவொரு கொடுமை! கடமையின் பால் கட்டுண்டு காதலை மறக்க வேண்டிய நிலைக்கு உந்தப்படுகிறான் நளன். அவன் செய்யக் கூடியது இங்கு ஒன்றுமே இல்லை.

நளன் - தமயந்தி கதை சற்றும் விறுவிறுப்புக் குறையாத அழகான காதல் கதை!

தன் மனத்துக் காதலைக் கட்டுப்படுத்திக் கொண்டு தமயந்தி பால் தேவர்கோனுக்காகத் தூது செல்கிறான் நளன். கன்னிமாடத்தில் அவள் முன்பு போய் நிற்கிறான். இங்கு தான் ஆச்சரியம்.

முன்பின் ஒருவரை ஒருவர் கண்டறியாத இரு காதலரும் ஒருவரை ஒருவர் தம் நோக்கினாலேயே இனம் கண்டு கொள்கின்றனர். இது தான் காதலின் வலிமை! குவளை மலர்களும் தாமரை மலர்களும் ஒன்றினிடத்தே ஒன்று பூத்தது போல, இருவர் கண்களும் காதல் நோக்கினாலேயே ஒன்றில் ஒன்று சென்று கலந்தனவாம். கடமைக்கும் காதலுக்கும் இடையே தடுமாற்றம் கொள்கிறான் நிடத நாட்டரசன்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**சிங்களப் பேரினவாதம் வீரியம் அடைகின்றதா?**

சிங்களப் பேரினவாதம் வீரியம் அடைகின்றதா அல்லது மூச்சு வாங்குகிறதா என்பது அரசியல் களத்தில் அடுத்த சில நாள்களுக்குள் நடைபெறப் போகின்ற சம்பவங்களிலிருந்து தெரியவரலாம். நான் இன்று எழுதும் கருத்து பதிப்பிற்கு வருவதற்கிடையில் நிலைமைகள் தலைகீழாக மாறலாம்.



ஆனால் பேரினவாதம் தன்னை நிலைநிறுத்தி அதிகாரப் படுத்தவே வழி செய்து வருகிறது.

கொழும்பு வந்த மகா சங்கத்தினரின் ஆயிரம் பௌத்த துறவிகள் தந்திருக்கும் அறிக்கை அல்ல – ஆணைகள் – அதையே வெளிப்படுத்தி, இதுவரை ராஜபக்ஷக்கள் நடத்திவந்த ஏற்பாடுகளைக் குழப்புகின்றன

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே விரிசல், குடும்பத்துக்குள் போட்டி, இவற்றால் அரசு பலவீனமடைந்து, எதிர்க் கட்சிகள் ஆட்சி அமைக்க வாய்ப்பு வரலாம் என்றெல்லாம் செய்திகள் உலாவுகின்றன.

ஊழல்களால் குடும்பம் அடைந்த ஆதாயங்களைக் கட்டிக்காக்க – அவற்றைத் தக்க வைத்துக் கொள்ள – சர்வதேசம் ஆராயும் மனிதகுலத்துக்கு எதிரான மற்றும் போர்க்குற்றங்களை எதிர்கொள்ள – எவ்வளவுதான் கருத்து வேறுபாடுகள் இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும், ஒன்றாக நின்று ஒருவரையாவது அதிகாரப் பதவிகளில் வைத்துக் கொள்வதுதான் ராஜபக்ஷகளின் நோக்கம்.

அரசமைப்பு மாற்றத்தின் மூலம் சிங்கள பௌத்தத்தை அரியணை ஏற்றி, 'ஒரே நாடு ஒரே சட்டம்' அமைப்பேன் என்ற வாக்குறுதிகளில் கோட்டா ஜனாதிபதியானார். இன்றைய நிலையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு சாத்தியமில்லை என்பது அவருக்கும் புரிகிறது; மகா சங்கத்துக்கும் தெரிகிறது. அதனால் பௌத்த துறவிகளும் மகாசங்கமும் ஆட்சிகளை அமைக்கும் அதிகாரத்தை நேரடியாகத் தாங்கள் அடைந்து கொள்வதற்காக இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஜனநாயகத்துக்கு ஆபத்தான அமில பரிசோதனைக்கு நாடு இழுக்கப்படுகின்றது.

மஹிந்த தனக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலம் இருக்கிறது என்று கூறி வருவது கூட ஆட்டம் காண்கின்றது. பதவி விலகாவிட்டால் மகா சங்கத்தின் சாட்டையடி தொடரும். நாமலின் கதையும் அதில் தொங்கும். இந்த ஆணைகளின் அழுத்தத்தில் சஜித் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தீவிரப்படுத்தினால் ஆதரவு எவ்வளவு இருக்கும்? அவரும் மகா சங்கத்துடன் நாட்டின் நன்மைக்காக கசப்புணர்வுகளை வளர்த்து, அவரவர்கள் அவரவர்களின் அலுவல்களோடு நிறுத்த வேண்டும் எனத் திடமாக உரைப்பாரா? அவற்றுக்கான முதுகெலும்பு – திராணி – எந்தத் தலைவரிடமாவது இருக்கின்றாதா? – என்பவையெல்லாம் கேள்விகளே.

கோட்டா தனது கடிதத்திலேயே மகா சங்கத்திடம் பாதம் பணிந்து விட்டார். சங்கத்துக்கு உகந்தவர் ஆகிவிட்டார்.

இடைக்கால அரசுக்கான பேச்சுகளும் ஊடாடுகின்றன.

மஹிந்தவுடன் அப்பம் சாப்பிட்டுவிட்டு வந்து ஜனாதிபதி போட்டியில் அவருக்கு எதிராக இறங்க ஒத்துக் கொண்டவர், இப்பொழுது யார் யாருடனோ விருந்துகளில் பங்கு பெறுகிறார் என்பதை ஊகிப்பது கஷ்டம். தம் பக்கத்தில் இருந்து வெளியேறிய இருவருக்கும் தரப்பட்ட மந்திரி பதவிகள் பறிக்கப்பட்டால் மட்டுமே ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்றவர், அவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்குப் போய் தேசிய இடைக்கால அரசை அமைக்க ஜனாதிபதி இணங்கியுள்ளார் எனத் தெரிவிக்கிறார். அதைத் தொடர்ந்து அதற்கு வழி விடுமாறு பௌத்த பிக்குகள் மஹிந்தவுக்கு ஆணை தருகின்றார்கள்.

ஞானக்காவுடனான நெருக்கம் கோட்டாவிற்கு மைத்திரிபால சிறிசேன மூலம் ஏற்பட்டது.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் அவரால் நகர்த்தப்பட்ட தாயக் காய்கள் மைத்திரியை மகா சங்கத்தினருக்கும் ஏற்றவராக்கி அவரே பிரதமர் ஆவாரா அல்லது அவரது சிபாரிசு தெரிவாகுமா, அந்தக் கட்டத்தில் ரணிலின் வகிபாகம் எதுவாக இருக்கும் என்பவையெல்லாம் புதிர்கள்.

போராட்டக்காரர்களின் "Go Home Gotta' என்ற கோரிக்கையில் கோட்டா இருக்க, அவரின் இருப்புக்காகக் கட்டப்படும் இந்த மாளிகை மெழுகிலானதாக இருக்குமா அல்லது அது இரும்பினால் அமையுமா? காலிமுகத்திடல் போராளிகள் இவற்றுக்கு நிமிர்ந்து நின்று தங்களது கோரிக்கைகளை வலுபடுத் துவார்களா? அந்த முதுகெலும்பு – திராணி – உருவாகுமா? அல்லது உடைத்து நொறுக்கப்படுமா என்பதில் இருந்துதான் பார்க்க வேண்டும்.

**பிஜித் தீவுகளின் முன்னுதாரணம்**

ஆஸ்திரேலியாவுக்கு கிட்டத்தட்ட 5 மணித்தியால விமான பயணத்தில் பசுபிக் தீவுக் கூட்டங்களில் ஒரு குடும்பமாக பிஜித் தீவுகள் இருக்கின்றன. பிரித்தானியாவின் கொலனி நாடாக இருந்த பொழுது இந்தியாவிலிருந்து கரும்புத் தோட்டங்களை உருவாக்க இந்தியத்தொழிலாளர்கள் கூட்டிச் செல்லப்பட்டார்கள். அங்கு சென்றதும் நாடு திரும்பு வது என்பது பகல் கனவாகி ஓர் அடிமை வாழ்விலே கிடந்தனர்.



இலங்கை போல இந்தக் கூலி மக்களை பிஜி மக்கள் வெறுத்தனர். விரும்பவில்லை. பிரித்தானிய காலனி அரசு அவர்களுக்கு சில சலுகைகளை கொடுத்து பிஜி மக்களுக்கு எதிராக தங்களது பாதுகாப்புக்குப் பாவித்து.

பிஜித் தீவுகளின் காணி உரிமைகள் காலங்காலமாகவே பூர்வீகவாசிகளினுடையவையாக இருந்தன. அவற்றை நிர்வகிக்க ஒவ்வொரு தீவில் இருந்தும், அதன் பெரும் பகுதிகளில் இருந்தும் வம்சாவளியாக வந்தவர்கள் கூட்டாக "Council of Chiefs' என்ற குழுமமான முறையை அமுல்படுத்தினர். முழுத் தீவுகளுமே காலனியில் அகப்பட்டு இருந்தாலும், அந்த முறைமையை தங்களது வசதிக்காக காலனி அரசும் பாதுகாத்தது.

இதனால் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் எவ்வளவு அபிவிருத்திகள் செய்திருந்தாலும் அவர்களுக்குக் காணிகளை கொள்வனவு செய்யும் அதிகாரங்கள் இல்லாமல் மிக மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே நிலைமை இருந்தது.

பிரித்தானியா வெளியேறியபோது பிஜித் தீவின் பூர்வீகக் குடிமக்கள் அதிகாரங்களில் ஆட்சி செலுத்தினர். இந்தியர்களைப் புறக்கணிக்கும் நிலைமைகள் வளர்க்கப்பட்டன.

இங்கு மகாசங்கம் போன்று இந்த Council of Chiefs, அவர்களுக்கு அனுசரணையாக இருந்த கிறிஸ்தவர்கள் திருச்சபையும் பின்னணியில் இருந்தன. அவர்கள் இந்து மதத்தை அரச உபாசனைக்கு உட்படுத்த விரும்பவில்லை. 1987 இல் நடந்த தேர்தலில் இந்திய மக்களின் ஆதரவோடு திமோச்சி பவத்திரா அரசமைத்துப் பிர தமரானார். இந்தியர்களுக்கு சலுகைகள் கூடும் என எதிர்பார்த்து தோற்றுப்போன அலையன்ஸ் கட்சியின் தலைவர் காமி சேசே மாராவின் தூண்டுதலில் அன்று இராணுவத் தளபதியாக இருந்த சித்வேனி ராபுக்கா இராணுவப் புரட்சியை ஏற்படுத்தி, ஜனநாயக அரசைக் கவிழ்த்து, பதவியேற் றார். யாரை நாட்டை ஆள அழைப்பது என்பது இந்தியர்களுக்கு சலுகைக் கூட்டுவதும், குறைப்பதும் என்பதிலேயே அரசியலாக நடத்தப்பட்டது. புரட்சி ஏற்படுத்தப்பட்ட போது துணைத்தளபதியாக இருந்து இயங்கியவர் இன்றைய பிரதமர் பிராங் பனிமாறாமா.



தொடர்ந்து அரசியல் போட்டிகளில் இந்திய வம்சாவளியில் வந்த மகேந்திரா சவுத்ரி பிரதமராக தெரிவு செய்யப்பட்டு அரசமைக்க, அதுவும் இராணுவத்தின் ஒரு பகுதியில் புரட்சி உருவாகி, இயங்காது பதவியிலிருந்து அகற்றப்பட்டது.

இவற்றை தொடர்ந்து நிலையற்ற தன்மையால் எவ்வளவோ இந்தியர்கள் வெளியேறி, அகதிகளாகவும் குடியேற்றம் தேடியும் நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்றனர்.

நாடும் அதன் ஒற்றுமையும் பொருளாதாரமும் சீரழிவதைக் கண்டு இராணுவத் தளபதியாக இருந்த பிராங் பனிமாறாமா அரசாங்கத்தை 2006 இல் கைப்பற்றி, இவற்றுக்கு மூலகாரணமாக இருந்த மெதடிஸ்ட் திருச்சபையின் பலத்தையும், Council of Chiefs என்ற அமைப்பு முறைகளையும் மாற்றியமைத்து, இந்திய மக்களுக்கு ஒரு நம்பிக்கையையும் பிஜியின் பூர்வகுடி மக்களுக்கு பொருளாதார பலத்தையும் ஏற்படுத்தினார். இந்திய இந்துக்களுக்கு எதிராக கிறிஸ்தவத்தை வளர்ப்பதாக நாடு மாற வேண்டும் என்ற கோரிக்கையை மெதடிஸ்ட் திருச்சபை வைத்தது.

அந்தக் குழாம்களை நீக்கி, Council of Chiefs என்ற முறையை ஒழித்து, அவர்கள் அதிகாரமற்ற சடங்குகளுக்காக மதிக்கப்படுபவர்களாக மாற்றினார்.

இப்படியாக நாட்டின் எதிர்காலத்திற்காக கோட்டா மகா சங்கத்தை நடத்துவார் என்றோ, எந்த சிங்களத் தலைவரும் அப்படி சிந்திப்பார்கள் என்று எண்ணுவதற்கோ இடமில்லை. மாறாக, வியட்நாம், லாவோஸ், கம்போடியா, பர்மா (மியன்மார்) போன்ற நாடுகளில் பௌத்த அதிகாரங்கள் அரசுகளை கட்டுப்படுத்திய நிலைமைகளை எதிர்பார்க்கத் தூண்டி பௌத்த துறவிகளின் ஆணை அமைந்துள்ளது. இந்தப் போட்டியில் தமிழ்மக்கள் திரும்பவும் அகப்பட்டு உள்ளார்கள்.

(வளரும்)

# மாஸ்கோவில் புடினைச் சந்திக்க திருத்தந்தை விருப்பம் அவர் விரும்பாவிட்டாலும் தொடர்ந்து வலியுறுத்துவோம்!

## திருத்தந்தை பிரான்சிஸ்ஸின் உறுதியான நிலைப்பாடு

**திருத்தந்தை அவர்கள் உக்ரைன் - ரஷ்ய போரை நிறுத்துவதற்குத் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார். இது பற்றிய ஆக்கம் ஒன்றை 27 மார்ச் 2022 அன்று காலைக்கதிர் தினசரிப் பத்திரிகை மற்றும் காலை மாலை இணையத்தளப் பத்திரிகையின் ஞாயிறு தின கிறிஸ்தவ செய்தி இதழில் வெளியிட்டோம். இவ்விடயம் தொடர்பான பிந்திய தகவல்களை இவ்வாக்கம் அலசுகிறது.**

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



### உலகில், ஐரோப்பாவில் அமைதி நிலவ அன்னை மரியாவிடம் செபிப்போம்

இறைவனின் அன்னையும் நம் அன்னையுமான மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த மே மாதத்தில் உக்ரைன் - ரஷ்யப் போர் மற்றும் தனிப்பட்ட மற்றும் திருஅவையின் கருத்துகளுக்காகவும் உலகின் அமைதிக்காகவும் இறைவேண்டல் செய்யுமாறு புதன் மறைக்கல்வியுரையில் திருப்பயணிகளிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் எனது வலது முழங்காலில் ஏற்பட்டுள்ள வலி காரணமாக உங்கள் மத்தியில் வரமுடியவில்லை, உட்கார்ந்துகொண்டே உங்களை வாழ்த்துவதற்கு மன்னிப்புக் கேட்கிறேன் என்றுரைத்த திருத்தந்தை, இந்த வலி விரைவில் குறையும் மற்றொரு புதன் மறைக்கல்வியுரை நிகழ்வில் உங்கள் மத்தியில் வர இயலும் என்ற தன் நம்பிக்கையையும் தெரிவித்தார்.

### உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுறச்செய்ய திருத்தந்தை எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு

உக்ரைனில் இடம்பெற்றுவரும் போரினால் சமுதாயம், அரசியல், திருஅவை, கிறிஸ்தவ ஒன்றிப்பு போன்ற துறைகள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் குறித்து சீ - 9 அவை கலந்துரையாடல்களை நடத்தியது.

திருப்பீட தலைமையகத்தின் சீர்திருத்தம் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு ஆலோசனை கூறும் சீ - 9 கர்தினால்கள் அவை, இவ்வாரத்தில் நடத்தி முடித்த கூட்டத்தில் இக்காலக்கட்டத்தில் உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் முக்கிய விவகாரங்கள் குறித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

திருப்பீட தலைமையகம் மற்றும் அத்தலைமையகம் உலகளாவியத் திருஅவைக்கு ஆற்றும் பணிகள் குறித்து



திருத்தூது கொள்கை விளக்கம் வெளியிடப்பட்டதற்குப் பின் முதல்முறையாக கூட்டம் நடத்தியுள்ள இக்கர்தினால்கள் அவை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பிரசன்னத்தில் முதல் அமர்வைத் துவக்கியது.

உக்ரைனில் இடம்பெற்றுவரும் போரினால் சமுதாயம், அரசியல், திருஅவை மற்றும், கிறிஸ்தவ ஒன்றிப்பு போன்ற துறைகள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன என்று கூறப்பட்டுள்ளது.

உக்ரைனில் போரை நிறுத்துவதற்குத் தானும் திருப்பீடச்செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களும் மேற்கொண்டுவரும் முயற்சிகள் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சீ - 9 கர்தினால்கள் அவையிடம் விளக்கியபோது, அம்முயற்சிகளுக்கு அந்த அவை தன் ஆதரவை வெளியிட்டது என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் கர்தினால்கள் அவையின் 41வது அமர்வில் திருப்பீட தூதரகப் பணியில் திருப்பீடத் தூதர்களின் பணிகள் திருத்தூது கொள்கை விளக்கம் நடைமுறைப்படுத்தப்படுவது, காலநிலை மாற்றம், திருஅவையில் பெண்களின் பங்கு போன்ற தலைப்புக்களிலும் கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. கர்தினால்கள் அவையின் அடுத்த அமர்வு இவ்வாண்டு ஜூன் மாதத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய மற்றும் உக்ரைன் இடையே கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக போர் நடைபெற்று வரும் நிலையில் ரஷ்ய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்த போப் பிரான்சிஸ் மேற்கொண்ட ராஜீய முயற்சி தோல்வி அடைந்தது. ஈஸ்டர் அன்று போர்நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவரது வேண்டுகோள் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சர்ச்சின் தலைவருடனான அவரது திட்டமிடப்பட்ட சந்திப்பு ரத்து செய்யப்பட்டது. ரஷ்ய - உக்ரைன் நட்புறவை உண்டாக்கும் போப் பிரான்சிஸின் முயற்சி தோல்வியடைந்தது. போப் போரை நிறுத்துவது குறித்து அல்லது குறைந்த பட்சம் போர் நிறுத்தத்தை மேற்கொள்வது குறித்து மாஸ்கோவுடன் நேரடி உரையாடல் நடத்த முயன்ற நிலையில், அவரது முயற்சி தோல்வியுற்றது.

போப் பிரான்சிஸ் தற்போது ஒரு விசித்திரமான சூழ்நிலையில் சிக்கி இருக்கிறார். ரஷ்ய அல்லது ஜனாதிபதி விளாடிமிர் புடினை பெயரிட மறுத்ததையும் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சர்ச்சின் தலைவருடன் நல்லுறவை கொண்டிருப்பதையும் அவர் விளக்க வேண்டும். போப் அவ்வாறு செய்யவில்லை என்கிறார். ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சர்ச்சின் தலைவர், இந்த போரை நியாயப்படுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போப் பிரான்சிஸ் உக்ரைன் மக்களுக்கு அமைதி செய்தியை அனுப்பியுள்ளார். மனிதாபிமான உதவியுடன் மரியுபோலில் இருந்து மக்களை வெளியேற்ற ஒரு கப்பலை அனுப்பவும் முன்வருகிறார். இதனுடன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்த ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சர்ச்சுடன் உறவுகளை மேம்படுத்தவும் அவர் முயற்சிக்கிறார்.

பெப்ரவரியில் ரஷ்ய அதன் அண்டை நாடான உக்ரைனைத் தாக்கி, போரை தொடங்கியதிலிருந்து, உக்ரைனின் பல நகரங்களில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. ஆனால் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பின்வாங்கத் தயாராக இல்லை.

### போர் ஒரு தெய்வநிந்தனைச் செயல் என்கிறார் கர்தினால் பரோலின்

உக்ரைனில் போர் முடிவுக்கு வருவதற்குத் தீர்வுகாண நாடுகளின் உறுதியான ஒத்துழைப்பு அவசியம், இல்லையெனில் அந்நாட்டில் போர் தொடர்ந்து இடம்பெற்று சிறாரின் வாழ்வைச் சீரழிக்கும் என திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் கூறினார்.

உரோம் நகர பல்கலைக்கழகத்தில் போருக்கு எதிராக - ‘அமைதியை கட்டியெழுப்புவதற்குத் துணிச்சல்’ என்ற நூலை வெளியிட்டு உரையாற்றிய கர்தினால் பரோலின் அவர்கள் இப்போது உக்ரைனில் இடம்பெற்றுவரும் கொடூரமான போர் முடிவுறபுதிய கருத்தரங்கம் ஒன்று தேவைப்படுகின்றது என்றார்.

‘போருக்கு எதிராக’ என்ற இந்நூல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் போருக்கு எதிராகவும் ஆயுதக்களைவு மற்றும் உரையாடலுக்கு ஆதரவாகவும் ஆற்றிய உரைகள் மற்றும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் உண்மையிலேயே தெய்வநிந்தனையாகும் எனவும், அப்போரைத் தொடரவிடாமல் போர் நிறுத்தம் இடம்பெறச் செய்து நிலையான மற்றும் நீதியுடன்கூடிய அமைதி ஏற்படுவதற்கு அனைத்து அரசியல் மற்றும் தூதரக வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்வது உலகளாவிய சமுதாயத்தின் கடமையாகும் எனவும் கர்தினால் பரோலின் அவர்கள் கூறியுள்ளார்.

### உக்ரைனுக்கு ஐ.நா. ஆதரவு

இதற்கிடையே, உக்ரைன் நாட்டிற்குச் சென்றுள்ள ஐ.நா. தலைமை பொதுச் செயலர் அந்தோனியோ குட்டெரஸ் அவர்கள் தாங்கிக்கொள்ளமுடியாத தலைவலி மற்றும் வேதனையின் மையமாக உக்ரைன் உள்ளது என்றுரைத்து, அந்நாட்டு மக்களுக்கு ஐ.நாவின் ஆதரவு இருக்கும் என்பதை உறுதிபடக் கூறினார்.

துன்புறும் உக்ரைன் மக்களுக்கென ஐ.நா. நிறுவனம் பத்து கோடி டொலர்களை ஒவ்வொரு மாதமும் வழங்கி வருகிறது எனவும் குட்டெரஸ் அவர்கள் குறிப்பிட்டார்.

### மாஸ்கோவில் புடினைச் சந்திக்கத் தயார் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்

மாஸ்கோவில் ரஷ்ய அரசுத்தலைவர் விளாடிமிர் புடின் அவர்களைத் தான் சந்திக்கத் தயார் எனவும் உக்ரைன் நாட்டின் கீவ் நகருக்குச் செல்வதற்குமுன் மாஸ்கோவுக்குத் தான் செல்லவேண்டும் என உணர்கிறேன் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலிய நாளிதழ் ஒன்றிற்கு அளித்த நீண்டதொரு பேட்டியில் கூறியுள்ளார்.

உக்ரைனில் போர் தொடங்கிய பின்னர் அந்நாட்டு அரசுத்தலைவர் ஜெலன்ஸ்கி அவர்களோடு தொலைபேசியில் உரையாடியது, உரோம் நகரிலுள்ள ரஷ்யாவின்

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

திருப்பீட தூதரகம் சென்றது, எல்லாவற்றிற்கும் மேலாக மாஸ்கோவில் புடினைச் சந்திக்க ஆவலாக உள்ளது உட்பட பல கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

உக்ரைனில் போர் தொடங்கி இருபது நாள்களுக்குப் பின்னர் கர்தினால் பியெத்ரோ அவர்களிடம் நான் மாஸ்கோவிற்கு வர விரும்புகிறேன் என்று செய்தி ஒன்றை புடினுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டேன், கர்தினால் அவர்கள் அனுப்பிய செய்திக்கு இதுவரை பதில் வரவில்லை என்று திருத்தந்தை கூறினார்.

இந்நேரத்தில் புடின் அவர்களால் என்னைச் சந்திக்க முடியாது மற்றும் அவர் அச்சந்திப்பை விரும்பவில்லை என்றுநான் நினைத்தாலும் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம், ஆனால் இந்தக் கொடூரம் எப்படி நிறுத்தப்பட முடியாமல் இருக்கிறது? 25 ஆண்டுகளுக்குமுன் இதே மாதிரியான கொடூரத்தை ருவாண்டா நாட்டில் நாம் எதிர்கொண்டோம் என்று திருத்தந்தை தெரிவித்தார்.

### போரில் ஆயுதங்கள் பரிசோதிக்கப்படுகின்றன

நேட்டோ, ரஷ்யவின் கதவுக்கருகில் நிலைகொண்டிருப்பது, அந்நாடு, போரைக் கட்டவிழ்த்துவிட ஒருவேளை காரணமாக இருக்கலாம், நான் வெகு தூரத்தில் இருப்பதால் என்னால் எதுவும் சொல்ல இயலாது, ஆயினும் உக்ரைனில் இடம்பெறும் போரில் ஆயுதங்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன என்பது மட்டும் தெளிவாக உள்ளது என்று திருத்தந்தை கூறினார்.

உலகில் ஆயுத வர்த்தகம் தடைசெய்யப்படவேண்டும் என்று சிலரே விண்ணப்பிக்கின்றனர், ஆனால் இதில் பலரின் குரல்கள் இணையவேண்டும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார்.





# ஆளுமை மிக்க அந்தணப் பெரியார்

## காரைநகர் ஈந்த பேராளுமை வைத்தீஸ்வரக்குருக்களின் குருபூசை இன்று

அந்தணகுலத்தில் பல ஆளுமைகள் இருந்து அரும்பணிகள் ஆற்றி இருக்கிறார்கள்.அவர்கள் ஆலயங்களில் கிரியைகளை ஆற்றும் நிலையிலும் அரச பணிகளை ஆற்றும் பதவிகளிலும் இருந்திருக்கிறார்கள். எங்கு அவர்கள் இருந்தாலும் தங்களின் அகவொழுக்கம், புற வொழுக்கங்களை எந்த நிலையிலும் கைவிடாதவர்களாகவே வாழ்வில் விளங்கியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வாழ்ந்த காரணத்தால் சமூகத்தில் அவர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்ற நிலையிலே இருந்தார்கள் இன்னும் இருக்கிறார்கள்.

வேதம் ஓதுவது வேதியர்க்கு அழகு. ஆண்டவனைத் தொட்டு ஆராதித்து அவனைப் பக்தி சிரத்தையுடன் பூசிக்கும் நிலையில் தம்மை ஆட்படுத்திக் கொண்டிருப்பதும் அந்தணரின் அழகெனலாம். கிரியைகளை ஆற்றி, ஆலய கும்பாஷேகங்களை முறைப்படி செய்து, மக்களும் நாடும் வளமுடன் இருக்கும் வழியிலே பயணிப்பதும்கூட அந்தணர்க்கு அழகு எனலாம்.

கிராமத்தின் நன்மதிப்பைப் பெற்று, அங்கு வாழும் மக்களுக்கு நாளும் பொழுதும் நல்ல குருவாய், நல்ல வழிகாட்டியாய், நல்ல ஆலோசகராய், விளங்கிய அழகும் – விளங்கும் அழகும் அந்தணப் பெரியோருக்கு வாய்த்திருக்கிறது. இப்படிப் பார்க்கின்ற வேளை ஈழத்தில் – குறிப்பாக யாழ்ப்பாண மண்ணுக்கு – அந்தணப் பெரியார்கள் பெருந் துணையாகவே விளங்கி இருக்கிறார்கள்.

வித்துவான் கணேசையர், வித்தியாதிபதி சதாசிவ ஐயர், காசிவாசி செந்திநாத ஐயர், வித்தியாதிபதி லக்ஷ்மண ஐயர், பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள், பண்டிதர் பஞ்சாட்சரசர்மா. இந்த வரிசையில் வந்து நிற்பவர்தான் காரைநகர் ஈந்த பேராளுமை வைத்தீஸ்வரக்குருக்கள் ஆவர். ஆலயத்திலும் நிற்பார். ஆன்றோர் அவையிலும் நிற்பார். வேதமும் ஓதுவார். வித்துவான்கள் மத்தியில் தொல்காப்பியமும் செப்புவார். இறைவனைப் பற்றி அருட்பாடல்களையும் பாடுவார். இலக்கியக் கூட்டங்களில் இலக்கியப் பாடல்களையும் எடுத்து நயமுரைப்பார். ஆனாலும் அந்தண ஆசாரத்தை அகமிருத்தியே அனைத்தையும் ஆற்றுவார்.

இப்பேராளுமை 1916 ஆம் ஆண்டு கணபதீஸ்வரக்குருக்கள் – சிவயோக சுந்தராம்பாள் தம்பதிகளுக்கு நற்புத்திரனாய் நானிலத்தில் இறையருளால் பிறந்தார்கள். ஆண்டவனையே அனுதினமும் நினைக்கும் ஆசாரசீலரான கணபதீஸ்வரக்குருக்களின் உதிரத்தில் உதித்த காரணத்தால் அவரின் புத்திரராய் பிறந்த வைத்தீஸ்வரக் குருக்களும் ஆண்டவன் அருளினைப் பெற்றே இம்மண்ணில் நல்லவண்ணம் வந்தார், மலர்ந்தார் எனலாம். தந்தையைக் குருவாய் கொண்டு தனது கல்வியை ஆரம்பித்தார். தந்தையின் வழி காட்டலில் நல்ல ஆசான்கள் இவருக்கு வந்தமைந்தார்கள். பண்டிதர் பஞ்சாட்சரசர்மா, பண்டிதர் சுப்பிரமணிய தேசிகர், மகாவித்துவான் கணேசையர் இவருக்கு நல்ல வெளிச்சத்தைக் காட்டினார்கள். சமயத்தைக் கற்றார். அன்னைத் தமிழையும் ஐயந்திரிபறக் கற்றார். சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்ந்தார்.ஆங்கிலமும் அறிவார். ஆனாலும் அவரின் கற்றல் தாகம் அடங்கிவிடவே இல்லை.

பேராளுமையாய் மிளிர்வதற்கான பாதையில் பயணிக்கத் தொடங்கினார் வைத்தீஸ்வரக் குருக்கள். நல்ல ஆசான்களிடம் கற்றமையோடு அமையாது மேலும் கற்றலின் வழியில் பண்டிதராய், பயிற்றப்பட்ட, ஆசிரியராய், நற்றமிழ் நாயகராய் உயரும் நிலைக்கு வந்து நின்றார் எனலாம்.

கற்றுத் தேர்ந்த குருக்கள் அவர்கள் கற்றதைக் கொடுக்க வேண்டும் என்னும் ஆவலினால் ஆசிரியப் பணியினை அணைத்துக் கொண்டார். கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் தொடங்கிய ஆசிரியப் பணி நாட்டின் பல இடங்களில் பயணித்து நிறைவில் தலைமை ஆசிரியர் நிலையில் இருந்து ஓய்வுக்கு வந்தது.

கொழும்பில் பணியாற்றும் வேளை கற்பித்தலோடு அமையாது ஏனைய நிலையிலும் தன்னுடைய ஆற்றலைப் பகிர்ந்து கொண்டார் என்று அறிகின்றோம். விவேகானந்த சபையில் நடத்தப்படும் சைவசமயப் பாடக்குழு, தினகரன் பத்திரிகை செய்திப்பிரிவு போன்றவற்றில் தனது பங்களிப்பை வழங்கினார். அத்துடன் சிறைச்சாலைக்குச் சென்று அறப்போதனையும் ஆற்றினார்.

ஓய்வு பெற்றபின்னர் பலர் தங்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் இருக்கும் காலத்தைப் பயன்படுத்தியே வாழ்வதைக் காண்கின்றோம். அப்படி இல்லாவிட்டால் பிரயாணங்கள் மேற்கொண்டு பொழுதினை ஆனந்தமாய் ஆக்கிக் கொள்ளுவதையும் காண்கின்றோம். இன்னொரு சாரார் இவ்வளவு நாளுந் தான் ஓடியோடி ஓய்வின்றி வேலை செய்து விட்டோம், இனிமேல் வீட்டில் நிம்மதியாய் இருப்போம் என்று பத்திரிகைகளை வாசித்து உண்டு உறங்குவதில் காலத்தைப் போக்குவதையும் காணுகிறோம். ஆனால் ஒரு சிலர் ஓய்வு காலத்தைச் சரியான வகையில் பயனாக்கி, சமூக நலத்தினைக் கருத்திருத்தி வாழ்ந்து, வாழ்வினை வையத்துள் நல்ல வாழ்வாக்குவதையும் கண்டு கொள்ள முடிகிறது எனலாம். அப்படியானவர்கள்தான் பேராளுமைகள்.

அந்த நிலையில் வந்து நிற்பவராகிறார் எங்கள் அந்தணப் பெரியோர் காரைநகர் தந்த நன்மணி வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள். மேடையில் பேசுவார். எழுதுவார். அத்துறைக்கு வருகின்றவர்களுக்கும் ஊக்கம் ஊட்டுகின்றவராகவும் இருப்பார். சைவத்தையும், தமிழையும் நாவலர் பெருமான் தனது இரு கண்களாகவே கொண்டாரென்று பலரும் விதந்து போற்றுவார்கள்.

யாழ்ப்பாண ஆன்மீகப் பேரொளி யோகர் சுவாமிகளின் நல்லாசியுடன் 1940 ஆம் ஆண்டில் குருக்கள் அவர்களால் காரைநகர் மணிவாசக சபை ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் பிறப்பால் இளைய சமுதாயத்திடம் சைவத்தைப் பற்றிய சிறப்பான புரிதல் உருவாகியது என்பது முக்கியம். காரைநகருக்கு மட்டுமல்லாது யாழ்மண்ணுக்கே இந்த அமைப்பு நல்லதோர் சமய வழிகாட்டுதலை வழங்கியது. இந்தச் சபையை அமைத் ததோடு நின்றுவிடாமல் இந்தியாவில் இருக்கின்ற சைவ ஆதீனங்களையும் இணைக்கும் பாலமாகவும் குருக்கள் அவர்கள் விளங்கினார் என்பதுதான் மிகவும் முக்கியம்.

ஈழத்துச்சிதம்பரம் என பக்தி சிரத்தையுடன் போற்றி நிற்கும் காரைநகர் சிவன் சன்னிதானத்தில் அமைந்துள்ள மணிவாசகர் சபையினூடாக 1955 ஆம் ஆண்டு தொடக்கம் திருவெம்பாக் காலத்தில் மணிவாசகர் விழா நடைபெறத் தொடங்கியது. தொடர்ந்து ஆண்டு தோறும் இவ்விழா நடத்துவதில் குருக்கள் அவர்களின் பணி மிகவும் போற்றப்பட வேண்டியது. இந்த விழாக்களில் தமிழகத்துப் பல அறிஞப் பெருமக்கள் கலந்து சிறப்பிப்பதும் ஈழத்திருநாட்டின் அறிஞப் பெருமக்கள் அவர்களோடு இணைந்து நிற்பதும் குருக்கள் அவர்களின் சிந்தனையால் – செயற்றிறனால் விளைந்த நல்ல பலனல்லவா! சங்கமிக்கும் அறிஞர்களால் பல அரிய பெரிய வியங்கள் எல்லாம் யாவருக்கும் கிடைக்கும் பெருவாய்ப்பும் வாய்த்திருந்தது. “காரைநகர் மணிவாசகர் சபை சைவமும் தமிழும் நல்கும் பொக்கிஷமாய் மிளிர்ந்தது. அந்தப் பொக்கிஷத்தை ஆக்கி அளித்த பேராளுமையாக எங்கள் குருக்கள் அவர்கள் திகழ்கிறார்.

காரைநகரில் சைவசமய வளர்ச்சி என்னும் குருக்கள் அவர்களின் நூல் – பல்கலைக்கழகத்தில் வைக்கப்படவேண்டிய பெறுமதியான நூல். பெறுமதியான நூலை ஆக்கிய வைத்தீஸ்வரக் குருக்களென்னும் பேராளுமை – பதிப்புத்துறையிலும் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினார். கந்தர் மடத்தைச் சேர்ந்த சுவாமிநாத பண்டிதரால் ஆக்கப்பட்ட திரு முறைப் பெருமை, பிரம்மஸ்ரீ கார்த்திகேயப்புலவரின் திண்ணைபுர அந்தாதி, “திருப்போசை வெண்பா, தன்னை அந்தாதி, “திக்கை அந்தாதி, வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்களின் நன்நூல் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும், தெரிநிலை வினையெச்சம், வினைத் தொகை ஆகியவற்றைப் பதிப்பித்தமையோடு அமையாது, ஏழாலைப் பண்டிதர் கந்தையா அவர்களின் நாவலர் பிள்ளைத்தமிழ், ஷேத்திரத் திருவெண்பா மற்றும் திருவாளர் சபாபதியால் எழுதப்பட்ட அருள் நெறித் திரட்டு ஆகிய நூல்களையும் பதிப்பித்தார் என்பது குருக்கள் அவர்களின் பதிப்புத்துறைப் பக்கம் எனலாம். அவரின் பதிப்புத்துறைக்கு முத்திரை பதிக்கும் வகையில் அமைந்த நூல்தான் –

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனார் புலவர்மணி சோ.இளமுருகனார் ஆக்கிய திருத்திண்ண புரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம் ஆகும்.

திருவாதிரைக் கால நிகழ்வுகளை மலராக்கி ஐந்து மலர்களாய் குருக்கள் அவர்கள் வெளியிட்டிருக்கிறார். அது மட்டுமன்றி காரைநகர் சைவ மகாசபைப் பொன்விழா மலர், “காரைநகர் மணிவாசகர் சபைப் பொன்விழா மலர், காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேக மலர் என்று வெளிவந்த மலர்கள் அனைத்துக்கும் எங்கள் பேராளுமை குருக்கள் அவர்களே ஆசிரியராய் இருந்து நெறிப்படுத்தி இம்மலர்களை மணம் கமழ வைத்தார்.

சைவத்தின் உயர் தத்துவங்கள் பொதிந்திருக்கும் திருவாசகத்தைக் கையில் எடுத்த பாங்குடன் நின்று விடாது – சைவத்துக்குத் தமிழும் இன்றியமையாதது என்பதை மனமிருத்தி 1960 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை ஆரம்பித்தார். இதன் வாயிலாகப் பல தமிழ்ப்பணிகளுக்கு வழி சமைத்தார் எனலாம். காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக இருபத்து ஆறு நூல்களை வெளியிட்டார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இக்கழகம் பெரிதும் துணையாக விளங்கியது. இக்கழகத்தின் செயற்பாடு 1970 தொடக்கம் 1980 காலப் பகுதியில் பெரு வெளிச்சமாய் அமைந்தது.

பேராளுமை வைத்தீஸ்வரக் குருக்கள் சைவத்தையும் தமிழையும் அகமிருத்தி தன்னாலான பணிகளை மேற்கொண்டார் என்பதை பலரும் காய்தல் உவத்தலின்றி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக அவரை வந்து சேர்ந்த விருதுகளும் பட்டங்களும் குவிந்து கிடக்கின்றன எனலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே அவரை வியந்து அவருக்கு தத்துவக் கலாநிதி என்னும் பட்டத்தை 2020 ஆம் ஆண்டில் வழங்கி பெருமைப்படுத்தியிருக்கிறது என்பது குருக்கள் அவர்கள் பேராளுமைதான் என்பதில் ஐயமுறுவதற்கு இடமில்லாமல் ஆக்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.



- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

இலங்கைக் கம்பன்கழகம் மூதறிஞர் என்னும் பட்டத்தை வழங்கி குருக்கள் அவர்களைக் கௌரவித்தமையும் மனங் கொள்ளத்தக்கதாகும். குருக்கள் அவர்களைக் கௌரவிப்பதன் மூலமாக கௌரவித்த அமைப்புக்களே பெருமையுற்றன எனலாம். அந்த வகையில் – வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு கலைஞான கேசரி என்னும் பட்டத்தையும், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சிவாகம கிரியா பூஷணம் என்னும் பட்டத்தினையும் வழங்கிப் பெருமைப்பட்டன.

நூல்கள் மீது ஆராத காதல் கொண்டிருந்தார் குருக்கள் அவர்கள். அதனால் அவரின் இருப்பிடமே பெரியதொரு நூல்நிலையமாய் திகழ்ந்தது என்பதைப் பலரும் அறிவார்கள். மலர்கள்,பத்திரிகைகள், பல்வேறுவகையான நூல்கள் குருக்கள் அவர்களைச் சூழ்ந்தே இருந்தன.தனது சேமிப்பில் இருந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களை – அவரின் தந்தையாரும் ஈழத்துச் சிதம்பர நூலின் ஆசிரியருமான சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் பெயரில் அமைக்கப்பட்ட கணபதீஸ்வரக்குருக்கள் நூல் நிலையத்துக்கு வழங்கி யாவரும் என்றுமே பயனுறச் செய்தார்.

தள்ளாத வயதானாலும் தமிழையும் சைவத்தையும் மனங்கொண்டவராகவே குருக்கள் அவர்கள் திகழ்ந்தார்கள் என்பதற்கு அவரின் தொண்ணூற்று ஏழாவது வயதில் சைவக்களஞ்சியம் என்னும் அரிய நூலின் தொகுப்பு ஆசிரியராய் இருந்து 2013 ஆம் ஆண்டில் வெளியீடு செய்தமை பெருஞ் சான்றாய் அமைகிறது எனலாம்.

எழுதி , பேசி, பதிப்பித்து, சமூகத்தில் முன்னின்ற குருக்கள் அவர்கள் அறவழியினையும் உபதேசிக்கும் ஆசானாயும் விளங்கி இருக்கிறார்கள். முப்பத்து இரண்டு விதமான அறங்களைத் தேர்ந்தெடுத்து தன்னுடைய நாள்குறிப்பில் எழுதி வைத்திருந்தார் என்று அறிய முடிகிறது. திருமணம் செய்ய இயலாத நிலையில் இருக்கும் ஏழைப் பெண்களுக்கு உதவுதல் வேண்டும் என்பார். இறந்தவர் உடலைத் தகனம் செய்ய இயலா நிலையில் இருப்பார்க்கு உதவ வேண்டும் என்று எடுத்துரைப்பார். ஆதரவற்றோரை அரவணைத்தல், அவருக்கு இருப்பிட வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல், கற்கும் மாணவர்களுக்கு உணவளித்தல் என்று பல வகை அறங்கள் செய்வது பெரும் புண்ணியம் என்றும் அவற்றைச் செய்தல் வேண்டும் என்பதும் குருக்கள் அவர்களின் விரிந்த, பரந்த சிந்தனையாய் இருந்திருக்கிறது என்றும் அவரின் வரலாற்றால் அறிந்திட முடிகிறது.

ஈழத்து மண்ணில் அதுவும் வட புலத்தில் காரைநகர் என்னும் புனித ஊரில் இப்படி ஒரு பேராளுமை, அந்தணப் பெரியோர் – சிவத்தமிழ் வித்தகராக, பண்டிதமணியாக, கலாநிதியாக விளங்கி இருக்கிறார் என்பது சைவத்துக்கும் தமிழ் மொழிக்கும் கிடைத்த பெருமை என்று சொல்லுவது பொருத்தமாய் இருக்கிறதல்லவா!

**அந்தணர்க்குண் மனையனையான் அருங்கலைகள்**
**மிகப் பயின்றான் அருமை ஆசான்**
**சந்ததும் சிவனன்பு தழைக்கின்ற**
**உள்ளத்தான் தகைசால் நண்பன்**
**கந்தமலி பூம்பொழில் சூழ் திண்ணாபுரங்**
**கவினோங்குங் கருத்து மிக்கான்**
**வந்தவருக்கு அமுதளிப்பான வண்பெயர்கொள்**
**வைத்தீஸ்வரக் குருக்கள்**

# உண்மையை புரிந்து கொள்ளுங்கள்!

## சுரேஷ் தெரிவிப்பு

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களைச் சுட்டிக்காட்டி நாட்டு மக்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் வரைந்திருக்கின்றார். ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக நாடுமுழுவதிலும் கிளர்ந்தெழுந்திருக்கும் இளைஞர், யுவதிகளின் எழுச்சிமிகு போராட்டத்திற்கு அவர் ஆதரவு தெரிவித்திருக்கின்றமையுடன், நாட்டின் சகல சகோதர இன மக்களும் கரிசனை காட்ட வேண்டிய விடயங்களையும் தெளிவுபடுத்தியிருக்கிறார். அது இங்கே பிரசுரமாகின்றது.**



எமது அன்பிற்கினிய தமிழ், சிங்கள, இஸ்லாமிய சகோதர சகோதரர்களே, தோழர்களே,

என்றும் இல்லாதவாறு நாடு பொருளாதார ரீதியாக மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்பதும் 55பில்லியன் டொலருக்கும் மேற்பட்டகடன் கொடுக்குமதிக்கு நாடு உள்ளாகி இருக்கிறது என்பதும் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவிடயமாக இருக்கின்றது.

### மக்கள் பாதிப்புகள்

இதன் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான விலைகள் பன்மடங்கு கூடியுள்ளமையுடன் அவற்றுக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கின்றது. வாகனங்களுக்கான எரிபொருள் இல்லாமை, சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவை கிடைக்காமை, மிகநீண்ட மின்வெட்டுகள், இதன் காரணமாக சிறுதொழில் தொடக்கம், சகலதும் முடங்கிப் போயிருக்கின்ற சூழ்நிலை, வைத்தியசாலைகளில் சிறுவர் தொடக்கம் முதியோர் வரையானோருக்குப் பல்வேறுபட்ட மருந்துகளுக்கான தட்டுப்பாடு. இவ்வாறு மக்கள் வாழ முடியாத ஒருநாடாக இலங்கை மாற்றப்பட்டிருக்கின்றது. இன,மத,குல பேதமில்லாமல், இந்த நாட்டின் சகல மக்களுமே இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பதினேழுமுறையும் யுத்தம் முடிந்த பின்னர் மூன்று முறையும் கடனுக்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடியதாக அரசாங்கம் கூறுகின்றது. கடந்த வாரம் அமெரிக்கா சென்று சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடிய பின்னர், நிதி அமைச்சர் அலி சப்றி அவர்கள் தனது கலந்துரையாடல் தொடர்பாக நாடாளுமன்றத்திற்குத் தெளிவுபடுத்துகின்றபோது, 'எமது உள்நாட்டு வருமானம் ஏறத்தாழ 1,500 பில்லியன் ரூபாக்களாக இருக்கையில், மூவாயிரம் பில்லியன் ரூபாவுக்கு மேல் வரவு - செலவுத் திட்டம் போடப்பட்டது. வரி அறவீடுகள் குறைக்கப்பட்டன. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் நாட்டை மீட்க முடியாத நிலைமைக்கு நாங்கள் போய்விடுவோம். இதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்' என்று கூறியிருக்கின்றார்.

மேலும், 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தவறானது. அதனை மாற்றி புதிய பட்ஜட்டைக் கொண்டுவர வேண்டும்' என்றும் அதில் வரிகள் அதிகரிக்கப்படும் என்ற விடயத்தையும் அலி சப்றி கூறியிருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் பேசுகின்றபொழுது, 'நாடு திவாலாகிவிட்டது' என்று கூறுகின்றார். மூன்று மாதத்திற்குள் பசி, பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடும் என்று அமைச்சர்கள் நாடாளுமன்றத்திலேயே அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

### தோல்வியை ஏற்கின்றனர்

வரலாற்றில் முதன்முறையாக ஆளுந்தரப்பு அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது தோல்விகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் ஆட்சியில் இருந்தவர்கள் வாங்கிய கடன்களூடாக இந்த நாட்டை அபிவிருத்தி செய்திருந்தால், இந்த நாடு சொர்க்கபூமியாக மாறியிருக்கும். இன்றுபோல் திவாலாகியிருக்காது. இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்தவர்கள் வாங்கிய கடன்களுக்கு என்ன நடந்தது என்பதை அனைத்து ஆட்சியாளர்களும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அதுமாத்திரமல்லாமல், வருடாந்த ரீதியாக அவர்கள் வாங்கிய கடன்களும், அந்தக் கடன்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் தெளிவுபடுத்த வேண்டும். சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யு சிங்கப்பூர் நாடு உருவாகிய வேளையில், தென்னாசியாவில் மிகவும் செல்வச்செழிப்பு மிக்க நாடாக இலங்கை விளங்கியது. அதன் காரணமாக சிங்கப்பூர் பிரதமராக இருந்த லீ குவான் யூ அவர்கள் 'சிங்கப்பூரை இலங்கைபோல் ஆக்குவேன்' என்று சபதம் செய்தார். இன்று சிங்கப்பூர் மிக வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. ஆனால் இலங்கை திவாலான நாடாக மாறியுள்ளது. இதற்கான காரணம் என்ன என்பதை பொருளாதார நிபுணர்களும் சமூக அறிவியல் நிபுணர்களும் அரசியல் மேதைகளும் ஏன் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

வேண்டிய கடன்கள் யாவும் கொள்ளையடிக்கப்படுகின்றனவா? அல்லது தவறான பொருளாதார முகாமைத்துவமா? அல்லது நாட்டிலிருக்கக்கூடிய இனங்களுக்குள் ஐக்கியமின்மையை உருவாக்கியமையா? போன்ற கேள்விகளுக்கு விடைகாணப்படவேண்டும்.

### நாடு முழுவதும் போராட்டம்

இன்று, இலங்கை முழுவதிலும் 'கோட்டா கோ ஹோம் - Gotta Go Home' என்ற முழக்கத்துடன் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கொழும்பு காலி முகத்திடலிலும் ஏனைய பல இடங்களிலும் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் ஒன்றுகூடி ஜனாதிபதியை வீட்டிற்குச் செல்லும்படி கோரி போராடி வருகின்றனர். ஜனாதிபதி முறைமை வேண்டாம் என்றும் கூறுகின்றனர்.

இலங்கை ஜனாதிபதி முறைமை என்பது ஒரு தனி மனிதன் மேல் அளவு கணக்கில்லாத அதிகாரங்களை ஒப்படைத்து அவரை ஒரு சர்வாதிகாரியாக, தான் விரும்பிய அனைத்தையும் செய்யக்கூடியவராக எமது அரசியல் சாசனம் உருவாக்கி வைத்திருப்பதென்பது இலங்கை நாட்டிற்கோ, ஜனநாயகத்திற்கோ ஆரோக்கியமான ஒரு விடயமல்ல. இப்பொழுதுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டதும் ஏற்கனவே 19ஆவது திருத்தத்தின் மூலம் நாடாளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை 20ஆவது திருத்தத்தின் மூலம் தனதாக்கிக்கொண்ட ஒரு நடவடிக்கைதான் அவர் மேற்கொண்ட முதல் விடயமாகும். இது எந்தளவுக்கு அவர் அதிகாரமோகம் கொண்டவர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அவ்வளவு அதியுச்ச அதிகாரங்கள் இருந்தபொழுதும், நாட்டின் பொருளாதார சீர்கேடுகளை இவரால் கட்டுப்படுத்த முடியாமை மாத்திரமல்லாமல், தோல்வியுற்ற ஒருநாடாக இலங்கையை மாற்றிய பொறுப்பை கோட்டாபய ராஜபக்ஷவும் இந்த அரசாங்கமுமே ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் கோட்டாவும் முழு அரசாங்கமும் பதவி துறப்பது மாத்திரமல்லாமல் ஜனநாயக விரோதமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை என்பது முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்பதையும் சகோதர இன மக்களுடன் இணைந்து தமிழ் மக்களாகிய நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம்.

### இழப்பு எதனால் வந்தது?

அரசாங்கம் இன்று நிலவுகின்ற பொருளாதார வீழ்ச்சிக்கு கொவிட்19ஐயும் ரஷ்ய - உக்ரைனிய யுத்தத்தையும் காரணம் காட்ட முயற்சிக்கின்றது. ஆனால் அது உண்மையல்ல. மாறாக, அழிவுகரமான ஒரு யுத்தத்திற்காக பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுத தளபாடங்களும், யுத்தவிமானங்களும், யுத்த கப்பல்களும் கொள்வனவு செய்யப்பட்டமையுடன், படையினரும் பல லட்சங்களாக அதிகரிக்கப்பட்டனர். மாறிமாறி வந்த சகல அரசாங்கங்களும் தாங்களே உருவாக்கிய இனவிரோதச் செயற்பாட்டை உணர்ந்து, பேசித் தீர்க்கப்படவேண்டிய ஒரு பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்வுகாணப் புறப்பட்டதனால் பல பில்லியன்கள் இழப்பு ஏற்படுத்தப்பட்டதுடன், ஊழல் மிக்கதாகவும் திறைசேரியையும் மத்திய வங்கியையும் கொள்ளை அடித்தமையும், இந்த நாட்டின் பன்முகத்தன்மைக்கேற்ற பொருளாதாரத் திட்டங்கள் இன்மையும் இன்று நாம் இந்த அழிவு நிலைக்கு வந்தமைக்கான காரணம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எம்மைப்போலவே நீங்களும் இதனை உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறோம்.

இன்று எந்த பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் உடனடியாக டொலர் பற்றாக்குறை என்று அரசாங்கத்தால் காரணம் காட்டப்படுகின்றது. அந்த டொலரைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியா, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் என அமைச்சர்கள் கடன் கேட்டு யாத்திரை போகின்றனர். நாடு பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடையவேண்டுமாக இருந்தால், இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும். ஆனால் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் காரணமாக அந்த அரசியல் ஸ்திரத்தன்மை இன்னமும் இலங்கையில் ஏற்படாமலேயே இருக்கின்றது. மறுபுறத்தில், ஒரு மிக வலுவான புலம்பெயர் தமிழர்கள் பல்வேறுபட்ட உலக நாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்கள் இந்த நாட்டில் பலகோடி டொலர்களை முதலீடு செய்யவும் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் இந்த நாட்டின் குடிமக்களில் ஒருபகுதியினராகிய பூர்வீகத் தமிழர்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமது மொழி, கலாசாரம், பண்பாடு, அடையாளம் பாதுகாக்கப்படவேண்டுமென்று போராடி வந்தபொழுதும்கூட, அவை இன்றுவரை தொடர்ந்தும் மறுதலிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. தமது நாட்டு குடிமக்களை சமத்துவமாக மதித்து இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாத அரசாங்கத்தில் நாங்கள் என்ன நம்பிக்கையில் இலங்கையில் முதலீடு செய்வது என்ற கேள்வியே புலம்பெயர் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

அரச தரப்பும் எதிர்த்தரப்பும் கடன்களை மறுசீரமைப்பது பற்றியும், புதிய கடன்கள் வாங்குவது பற்றியும் மாத்திரமே பேசுகின்றனர். இது மேலும் மேலும் இலங்கையின் கடன்சுமையை அதிகரிப்பதற்கே வழிவகுக்கும். ஆகவே இலங்கையில் அந்நியச் செலவாணிகளை உள்ளீர்க்க வேண்டுமாக இருந்தால், இலங்கைக்குள் மிக அதிகளவிலான மூலதனங்களை உருவாக்க வேண்டும். அந்த மூலதனங்கள் என்பன வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதாகவும், ஏற்றுமதிசார் உற்பத்திகளை அதிகரிப்பதாகவும் சுற்றுலாத்துறையை நவீனமயப்படுத்தி விஸ்தரிப்பதாகவும் அமையவேண்டும்.

### அரசியல் முறைமை மாற வேண்டும்

இந்தநாட்டின் 'அரசியல் முறைமை' - Political System - மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் நீங்கள் முன்வைத்துள்ளீர்கள். நாங்களும் அதனுடன் ஒன்றுபடுகின்றோம். ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வது மாத்திரம் இந்த நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் முறைமையையும் மாற்றிவிடாது. இலங்கையின் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டும், இலங்கையின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டும், அதற்கு இலங்கை குடிமக்கள் அனைவரையும் ஒன்று திரட்டக் கூடிய வகையில் அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதனூடாக பாரிய பொருளாதார பாய்ச்சல் ஒன்றை ஏற்படுத்த முடியுமென்பது எமது கருத்தாகும். அதற்கேற்ற வகையில் மிகவும் பிற்போக்குத்தனமான ஒற்றையாட்சி முறை என்பது மாற்றப்பட்டு அனைத்து மக்களும் சமத்துவமாக வாழக்கூடியதும், தமது பிரதேச அபிவிருத்திகளை தாமேசெய்து கொள்வதற்கான ஒருசமஷ்டி அமைப்புமுறை இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதென நாங்கள் கருதுகிறோம்.

அந்தவகையில், மேற்கண்ட எமது ஆலோசனைகளை உங்களது போராட்டங்களில் நீங்கள் முன்னிறுத்துவீர்களாக இருந்தால், நாங்கள் மிகவும் இறுக்கமாக ஒன்றித்துப் பயணிக்கலாம் என்பதுடன், அடுத்த சிலவருடங்களிலேயே எமது அரசியல் பொருளாதார இலக்குகளை எய்தக்கூடியதாக இருக்கும்.

ஒட்டுமொத்த நாட்டின் நன்மைகருதி, நாங்கள் முன்வைக்கும் இவ்வாலோசனைகள் இனவாதக் கருத்துகளாக சிலசமயங்களில் வியாக்கியானப்படுத்தப்படலாம். ஆனால், நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பயணிக்கும் யாரும் அதற்கு இடைஞ்சலாக இருக்கக் கூடிய சகலவற்றையும் தகர்த்தெறியவே யோசிப்பார்கள். ஆகவே இது இனவாதக் கருத்துகள் இல்லையென்று போராட்டக்களத்தில் உள்ள நீங்களும் ஏற்பீர்கள் என்று நம்புகிறோம்.

யுத்தத்திற்குப் பிற்பாடு பல்வேறு வழிமுறைகளில் தமிழ் மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதனை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தமிழர் பிரதிநிதிகளும் தமிழர் தரப்புகளும் நேரடியாகவும் போராட்ட வழிமுறைகளினூடாகவும் மீண்டும் மீண்டும் கூறியும் இலங்கை அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்க மறுத்து வருவதுடன், எண்ணிக்கையில் பெரும்பான்மை மக்களான சிங்களமக்களாகிய நீங்களும்கூட இவற்றைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறீர்கள் என்பது எம்மைக் கவலையடையச் செய்துள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் ஆர்ப்பாட்டங்களின் போது சிறுவர்களுக்கு எதிராக வன்முறை!

## கண்டிக்கிறது யுனிசெவ்

எதிர்ப்பு போராட்டத்தின் போது சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை யுனிசெவ் நிறுவனம் கண்டித்துள்ளது. எதிர்ப்பு போராட்டத்தில் சம்பந்தப்பட்ட சிறுவர்களுக்கு எதிரான வன்முறை நடந்துள்ளமை தொடர்பாகக் கிடைத்துள்ள செய்திகள் தொடர்பாக யுனிசெவ் கவனம் செலுத்தியுள்ளது.

சிறுவர்கள் உட்பட அனைத்து தரப்பினரின் அமைதியாக ஒன்றுகூடல் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும். சிறுவர் உரிமைகள் தொடர்பான இணக்கப்பாடுகளுக்கு அமைய சிறுவர்கள் மற்றும் பருவ வயதினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களில் கலந்து கொள்ளவும் அவர்களின் கருத்துக்களை முன்வைக்கவும் உரிமையுள்ளது.

சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும், உள்ளூர் சமூகத்துக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உள்ளன.

அனைத்துவன்முறைகளும்நிறுத்தப்படவேண்டும். அனைத்து மூத்தவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதுடன் எதிர்ப்புப் போராட்டங்கள் உட்பட சகல விதமான வன்முறைகளில் சிறுவர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

சிறுவர்களுக்கு எதிராக அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு சட்டத்தை நடைமுறைப் படுத்தும்நிறுவனங்களிடம்கோரிக்கைவிடுக்கின்றோம்.

சிறுவர்களின் பாதுகாப்புக்காக அடிப்படை உத்தரவாதங்கள் அனைத்து இடங்களிலும் சகல நேரங்களிலும் பொருந்தும் என்பதை உறுதிப்படுத்துமாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களிடம் கோருகிறோம் என யுனிசெஃப் அமைப்பு கூறியுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு எதிரில் உள்ள வீதியில் நடைபெற்ற அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர் புகைக் குண்டு தாக்குதலில் போராட்டம் நடைபெற்றதற்கு அப்பால் தொலைவில் இருந்த சிறுவர்கள் உட்பட பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். - என்று தெரிவித்துள்ளது.

# இந்தியாவின் யாசகர் இலங்கைக்கு உதவி!

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகத் தமிழகத்தின் தூத்துக்குடியில் யாசகர் ஒருவர் சேகரித்த பணத்தை இலங்கைத் தமிழர்களுக்கு அனுப்பிவைக்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தூத்துக்குடியில் யாசகம் பெறும் ஆலங்கிணறு பகுதியை சேர்ந்த 50 வயதான பூல்பாண்டி என்ற நபரே இவ்வாறு யாசகம் எடுத்து இந்த நெகிழ்ச்சி செயலை செய்துள்ளார்.

கொவிட் தொற்று பரவல் காரணமாக தூத்துக்குடிக்குத் திரும்ப முடியாத நிலையில், மதுரையில் தங்கி யாசகம் எடுக்கும் பணத்தில், கொவிட் நிவாரண, முதலமைச்சரின் நிதிகளுக்கு 51 தடவைகளாக 5 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளன்று ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக நிதி வழங்கலாம் என்று 50 ஆயிரம் ரூபாவுடன் 52 ஆவது தடவையாக வந்துள்ளார்.

இதன்போது இலங்கை தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், தான் சேகரித்த அந்த பணத்தை முதலமைச்சர் நிதிக்கு வழங்கிவிட்டதாகவும், அந்த பணம் இலங்கை தமிழர்களுக்கு சென்றடையும் வகையில் ஏற்பாடு செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## புதுக்குடியிருப்பில் பெற்றோலுக்கு நீண்ட வரிசையில் மக்கள் கூட்டம்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலுக்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்பதை அவதானிக்க முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த நான்கு நாட்களுக்கு மேலாக பெற்றோல் இல்லாத நிலையில் நேற்று இரண்டு பௌஸர் பெற்றோல் கிடைத்துள்ளது.

இந்நிலையில் ஒட்டோக்கள் மற்றும் உந்துருளி பாவனையாளர்கள் நீண்டநேரம் காத்திருந்து எரிபொருளை நிரப்பி வருகின்றனர். எனினும் மண்ணெண்ணெய், டீசல் இல்லாத நிலை தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது.

எதிர்வரும் காலத்தில் பெற்றோலுக்காகத் தட்டுப்பாடும் ஏற்படும் என்ற அச்சத்தில் வாகன ஓட்டிகள் வரிசையில் நின்று பெற்றோலைப் பெற்று வருகின்றார்கள்.

ஓட்டோ, மோட்டார்சைக்கிள், கார்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோலை வழங்கி வருகின்றார்கள்.

# கல்லடி திருச்செந்தூர் ஆலயத்திற்குள் நுழைந்து இளைஞர் குழு தாக்குதல்

## குருக்கள் உட்பட 4 பேர் படுகாயம்

மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் ஆலயத்துக்குள் உள்நுழைந்த இளைஞர்குழு வியாழக்கிழமை இரவும் வெள்ளிக்கிழமை பகலிலும் தாக்குதல் நடத்தியதில் குருக்கள் ஒருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி ஆலய காணியின் கடற்கரை பகுதியில் இரவில் இளைஞர் குழு ஒன்று போதைவஸ்து பாவித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்தினரிடம் பொலிஸார் உங்கள் ஆலயத்தின் கடற்கரை எல்லை பகுதியில் இளைஞர் குழு ஒன்று போதைவஸ்து பாவித்துவருகின்றது எனவும் அவர்களுடன் நீங்களும் கைது செய்யப்படுவீர்கள் எனவும் எனவே உங்கள் ஆலய எல்லை வேலியை அமைக்குமாறும் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் ஆலய நிர்வாகம் ஆலயத்தைச் சுற்றி மதில் அமைத்துவருகின்றது.

இதன் போது குறித்த இளைஞர்குழுவினர் தொடர்ந்து மதில் அமைப்பதற்கு இடையூறு விளைவித்து வந்ததுடன் கட்டிய மதிலின் ஒரு பகுதியை உடைத்துள்ளனர்.

இந்நிலையில் கோவில் கோபுரம் அமைத்துவரும் வந்தாறுமூலையைச் சேர்ந்த ஆச்சாரியார்கள் இருவர் சம்பவதினமான வியாழக்கிழமை இரவு கடற்கரை பகுதியில் அமர்ந்து இருந்த போது அங்கு திடீரென வந்த குறித்த இளைஞர்குழு அவர்கள் மீது பொல்லுகளால் தாக்கிவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இதில் காயமடைந்த இரு ஆச்சாரியர்களையும் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இவ்வாறான நிலையில் மீண்டும் வெள்ளிக்கிழமை காலையில் கோவிலுக்குள் உள்நுழைந்த இளைஞர் குழுவினர் அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் குருக்கள் ஒருவரும் அங்கு தொண்டு செய்துவரும் இளைஞன் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலை நடாத்தியவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# உண்மையைப் புரிந்து ......

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

### எமது ஆலோசனைகள்

அன்பிற்கினிய எமது சிங்கள சகோதர சகோதரிகளே!

கீழ்வரும் விடயங்களை நீங்கள் மிகவும் கரிசனையுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

1. பெற்றோர் உறவினர்கள் முன்பாக கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான நீதியான விசாரணை ஒன்றை நடாத்தும்படி நாங்கள் கோரியும்கூட அது இன்றுவரை மறுதலிக்கப்பட்டு வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்கள், தந்தையர்கள், உறவினர்கள் 1,800 நாள்களைக் கடந்தும் போராடிக்கொண்டிருக்கின்ற வேளையிலும், தமது பிள்ளைகளைத் தேடியே சுமார் 200இற்கும் மேற்பட்ட தாய்மார்கள் இதுவரை உயிரிழந்துள்ள நிலையிலும் இதனை யாரும் கண்டுகொள்ளாமல் இருப்பதென்பது ஒரு வேதனைக்குரிய விடயமாகும்.

2. யுத்தம் நடந்தகாலத்தில் ஆயுதப் படையினரால் பல்லாயிரம் ஏக்கர் கணக்கான பொதுமக்களின் காணிகள் பலாத்காரமாகப் பறித்தெடுக்கப்பட்டன. யுத்தம் முடிந்து 13வருடங்கள் கடந்திருக்கின்ற சூழ்நிலையிலும் காணிகள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்பதுடன், இராணுவத்தினரும் கடற்படையினரும் தமது முகாம்களுக்காக புதியபுதிய காணிகளையும் பறிமுதல் செய்து வருகின்றனர். இவை ஒருபுறமிருக்க, வனவளபாதுகாப்பு, வனஜீவராசிகள் சரணாலயம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தொல்பொருள் பகுதிகள் என தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் மேற்கண்ட அரச திணைக்களங்களால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை உடன் நிறுத்துமாறு கோரியும் எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் விவசாயம் செய்து பிழைத்த பல்லாயிரக்கணக்கான எமது மக்கள் காணி, நிலங்கள் இல்லாமல் நடுத்தெருவிற்குத் தள்ளப்பட்டுள்ளனர். யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்கள் மீது விழுந்து கொண்டிருக்கின்ற பாரதூரமான அடி இதுவாகும்.

3.பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது தற்காலிக ஏற்பாட்டில் கொண்டுவரப்பட்ட போதிலும்கூட, 45வருடகாலமாக அது நடைமுறையில் இருப்பதுடன், இதனால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது தமிழ் மக்களே என்பதும் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டும். இந்த காட்டுமிராண்டித்தனமான சட்டம் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் தொடக்கம் பல்வேறுபட்ட நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் அரசாங்கம் தனக்கு ஒத்துவராதவரை, பொய்யான குற்றச்சாட்டுகளின் கீழ் கேள்வி நியாயம் இல்லாமல் அவர்களைக் கைது செய்வதற்கும் தடுத்து வைத்திருப்பதற்காகவுமே இந்தக் காட்டுமிராண்டித் தனமான சட்டத்தை வைத்திருக்கிறது. உங்களில் பலர் இந்த சட்டம் அகற்றப்பட வேண்டும் என்று கூறிவருவதையும் நாங்கள் அறிவோம். இதனை முழுமையாக அகற்றும்வரை உரத்துக் குரல் கொடுக்கும்படியும் அரசாங்கத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் இதனை அழுத்தம் திருத்தமாகக் கூறும்படியும் உங்களை நாங்கள் வேண்டுகிறோம்.

4. இதே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ், கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகள் பல வருடங்களாக எந்தவித விசாரணைகளும் இன்றி, தடுப்புக்காவல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். மனிதகுலத்திற்கு எதிரான இந்த சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களையும் விடுவிக்கவேண்டும் என்பதையும் அதற்கு நீங்களும் எம்முடன் இணைந்து போராடவேண்டும் என்பதையும் நாங்கள் உங்களிடம் கோருகின்றோம்.

5. இலங்கையின் இராணுவம் என்பது உலகின் பதினான்காவது பெரிய இராணுவமாக இப்பொழுது சொல்லப்படுகின்றது. மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரையும் இன்னும் கடற்படை, விமானப்படையையும் கொண்டதாக இலங்கை படையினர் இருக்கின்றனர். இரண்டுகோடியே இரண்டரை லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த தீவிற்கு இவ்வளவு பிரமாண்டமான படையினரும் அவர்களுக்கான முகாம்களும், ஊதியங்களும், வாகனச் செலவீனங்களுமாக இலங்கையின் தேசிய வருமானத்தில் ஏறத்தாழ கால்பகுதி இன்றும் செலவு செய்யப்படுகின்றது. யுத்தம் முடிந்து 13 வருடங்கள் ஆகியிருக்கக்கூடிய சூழ்நிலையில் படிப்படியாக இவற்றைக் குறைத்து செலவீனங்களைக் குறைக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுடன் படையினருக்கான செலவினங்களும் அதிகரிக்கப்படுகின்றன. உற்பத்திசார் அபிவிருத்தி இல்லாத ஒருதுறைக்கு நாட்டின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் தொகையை ஒதுக்குவதென்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு குந்தகமானது என்பதை இனியாவது நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

# அம்பாறை பொலிஸ் காவலரண் எரிப்பு மனித உரிமை ஆணையகம் விசாரணை

அம்பாறை – அட்டாளைச்சேனை, பாலமுனை வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பொலிஸ் காவலரண் பகுதியில் வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட சம்பவம் ஒன்றின் காரணமாகக் காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை மற்றும் அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்களிடம் விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.





இதற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையிலான குழு சம்பவ இடத்தை பார்வையிட்டமையுடன், குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் தலைமையிலான குழுவினர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பொலிஸார் மற்றும் பொதுமக்களிடம் இந்த விடயம் சம்பந்தமாக விசாரணைகளை ஆரம்பித்து வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் பதற்றம் ஏற்படக் காரணம் சம்பவ இடத்தில் பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் இறந்துவிட்டார் என அங்கு நின்றவர்கள் கூறிய வதந்தியே கலவரமாக மாறுவதற்குக் காரணமாக அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர அந்த சோதனைச் சாவடி தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளும் ஏற்கனவே வெளியாகியுள்ளன எனத் தற்போதைய விசாரணைகளிலிருந்து வெளியாகியுள்ளது.

சம்பவ தினமன்று சோதனை சாவடியைத் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர்கள் மோதினர் எனவும் அதனால் ஏற்பட்ட விசாரணையின் போது பதற்றம் ஏற்பட்டதாக பொலிஸ் தரப்பினர் குறிப் பிட்டுள்ளமையுடன் பொதுமக்கள் பொலிஸாரின் அறிக்கை உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் பூர்வாங்க விசாரணை அறிக்கையை உடனடியாக அனுப்புமாறு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் மனித உரிமை ஆணைக்குழு கேட்டுள்ளது.

பாலமுனை பிரதேசத்தில் பொலிஸாரின் வீதித் தடைக் காவலரண் ஒன்றைப் பொதுமக்கள் தீ வைத்து எரித்துள்ளதோடு அங்கிருந்த பொலிஸார் மற்றும் ஊர் காவல் படையினர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வீதித் தடைக் காவலரணில் இருந்த ஊர் காவல் படை உத்தியோகத்தர் ஒருவர் பொதுமகன் ஒருவரை மிகவும் மோசமாகத் தாக்கினார் எனவும் அதனையடுத்து அங்கிருந்த பொலிஸ் மற்றும் ஊர்காவல் படை உத்தியோகத்தர்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியதோடு, வீதித் தடைக் காவலரண் மீது தீ வைத்தனர் எனவும் சம்பவ இடத்திலிருந்தோர் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து அந்த இடத்துக்கு வந்திருந்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதன்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொதுமக் கள் இருவர் காயமடைந்தனர்.

40 வயதுடைய இமாமுதீன் என்பவரும், 31வயதுடைய பாஹிர் என்பவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என, வைத்திய அத்தியட்சகர் ஆஷாத் எம். ஹனீபா தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் 06 பேரும், ஊர் காவல் படையினர் 03 பேரும் சிறிய காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் வைத்திய அத்தியட்சகர் கூறினார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பொதுமக்களில் இமாமுத்தீன் என்பவருக்குக் கையிலும், பாஹிர் என்பவருக்கு வயிற்றிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சம்பவத்தை அறிந்து அங்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊடகவியலாளர் உட்பட 10 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பொதுமக்கள் என 16 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வியாழக்கிழமை இரவு ஆரம்பித்த இந்த சம்பவம் வெள்ளி அதிகாலை 1.30 மணி வரையிலும் நீடித்திருந்தது. அத்துடன் சம்பவம் தொடர்பில் ஆராயக் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கமல் சில்வா உள்ளிட்ட பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரிய நியமனத்தை மீளாய்வு செய்க!

## இம்ரான் மகரூப் எம்.பி. கல்வி அமைச்சுக்குக் கடிதம்

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் வழங்கப்பட்ட கல்வியியற்கல்லூரி ஆசிரியர் நியமன பாடசாலைகள் தொடர்பாக மீளாய்வு செய்யுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சுச் செயலாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு

'கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் அண்மையில் வழங்கப்பட்ட கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் பல ஆசிரியர்களின் பெற்றோர்களால் பல்வேறு குறைபாடுகள் என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அவற்றில் பொதுவாகப் பின்வரும் விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்பதை தங்களது கவனத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொக்குவரத்துப் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இயன்றவரை ஆசிரியர்களின் வசிப்பிடத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலைகள் வழங்கப்பட வேண்டுமென்பதை கொழும்பு கல்வி அமைச்சு செயலாளர் ஏற்றுக் கொண்டுள்ளார் என ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமனம் பல ஆசிரியர்களுக்கு வசிப்பிடத்திலிருந்து வெகுதூரத்தில் வழங்கப்பட்டுள்ளது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ் போக்குவரத்தின் மூலமே பாடசாலையைச் சென்றடையக் கூடியதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பணியாற்றிய காலத்தில் ஆசிரியைகளுக்கு (பெண்களுக்கு) பஸ் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பாடசாலைகள் வழங்கும் நடைமுறை இருந்தது.

எனினும், தற்போது வழங்கப்பட்ட நியமனத்தில் இது கவனத்தில் கொள்ளப்படாமல் ஆசிரியைகள் பஸ்ஸில் இருந்து இறங்கி ஓட்டோவில் சில கிலோ மீற்றர்கள் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்லும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சில பாடங்களுக்கு ஆசிரியர்கள் பாடசாலையில் தேவை இல்லாத போதிலும் அங்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சில பிரதேசங்களில் குறித்த பாடத்துக்கு வெற்றிடம் நிலவிய போதிலும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை வேறு பிரதேச ஆசிரியர்கள் அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சில ஆங்கில ஆசிரியர்கள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம் கற்பிப்பதாய் இருந்தாலும் விளக்கங்களை சிங்கள மொழியில் செய்ய முடியாத நிலை இந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் சரியாகக் கற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் உள்ள பாட வெற்றிடத்துக்கு அந்தப் பிரதேச ஆசிரியர்கள் இருந்த போதிலும் அவர்களை வேறு பிரதேசத்துக்கு நியமித்து அந்தப் பிரதேச வெற்றிடத்துக்கு வேறு பிரதேச ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



என்னிடம் முறையீடு செய்துள்ள ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ள விடயங்களின் சாரம்சமே இவையாகும். எனவே, இந்த விடயங்கள் தொடர்பாக மீள்பரிசீலனை செய்து மேற்படி பிரதேச ஆசிரியர்களை அந்த வலய வெற்றிடத்துக்கு நியமிக்க முன்னுரிமை கொடுத்து அங்கு வெற்றிடம் இல்லாவிடின் இயன்றவரை அயல் வலய வெற்றிடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையையும், ஆசிரியர்களின் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு இந்த விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுப்பீர்களென பெரிதும் எதிர்பார்க்கிறேன் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## ஆத்திரமூட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேணுவதற்கு மிகவும் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் பொறுப்புள்ள பிரஜைகளாக செயற்படுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என பாதுகாப்பு அமைச்சும் பொதுப் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து அறிவித்துள்ளன.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதலில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சமூக நெருக்கடிகள் மற்றும் அமைதியின்மையை நிர்வகிப்பதற்கு அனைத்து மக்களும் மிகவும் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு அன்புடன் கேட்டுக் கொள்கின்றது.

ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் அமைதியான முறையில் தமது போராட்டங்களையும் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்துவதற்கான இலங்கை மக்களின் ஜனநாயக உரிமையை நாம் அனைவரும் மதிக்கின்றோம்.

எனினும் கடந்த சில நாள்களாக அமைதிப் போராட்டமாக நடைபெற்றுவந்த போராட்டங்களை மாற்றியமைத்து மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டு நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கும் விதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்படும் போராட்டங்கள் மற்றும் ஹர்த்தால்களால் நாம் அனைவரும் மிகுந்த உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம் என்பதே உண்மையாகும்.

நாட்டில் நிலவும் சட்டம், ஒழுங்கைப் பொருட்படுத்தாமல் ஆத்திரமூட்டும் வகையிலும் அச்சுறுத்தும் வகையிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்கின்றனர் எனவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படுகின்றன எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் நாட்டின் சட்டத்தை மதிக்கும் பெருமளவான மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள்.

தற்போதைய நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இற்கு அமைய பொது அமைதியைப் பேணுவதற்கும், மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், சமூக ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு அதிகாரங்களின் படி 2022 மே 6 ஆம் திகதி நள்ளிரவு முதல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. - என்றுள்ளது.

## அரச உயரதிகாரிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்க வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பொலிஸாரால் இலகுவாகக் கட்டுப்படுத்தப்படக் கூடியவாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் எதற்காக அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பது நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம், கைது மற்றும் தடுப்புக் காவலுடன் தொடர்புடைய உரிமைகள் மற்றும் பிற அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் அவசரகால நிலையின் போது பாதிக்கப்படாது என நம்புகின்றோம். - என்றுள்ளது.

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூல காரணங்களுக்குத் தீர்வு காண வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

**பிரிட்டன்**

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் -

தற்போதைய சவால்களைத் தீர்ப்பதற்கு ஜனநாயக மற்றும் அமைதியான அணுகுமுறைகள் அவசியம். அனைத்து அடிப்படை உரிமைகளுடன் அமைதியான போராட்டத்திற்கான உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன மதிக்கப்படவேண்டும். ஜனநாயக உரையாடல் மற்றும் தீர்வுகளை அவசரகால சட்டம் கட்டுப்படுத்துகின்றது - என்று தெரிவித்துள்ளார்.

**ஐரோப்பிய ஒன்றியம்**

ஐரோப்பிய ஒன்றியத்தின் தரப்பில் -

தெற்காசியாவின் பழமையான ஜனநாயக நாட்டில் இலங்கை மக்கள் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை எவ்வாறு முழுமையாக அனுபவிக்கின்றார்கள் என்பதை ஒரு மாத அமைதியான போராட்டங்கள் காட்டியுள்ளன. அவசரகால நிலை நிச்சயமாக நாட்டின் சிரமங்களைத் தீர்ப்பதற்கு உதவாது. அது எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமெரிக்கா**

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் -

மற்றும் ஓர் அவசரகால நிலை தொடர்பில் கவலை அடைகின்றேன். அமைதியான மக்களின் குரல் கேட்கப்பட வேண்டும். அனைவருக்கும் செழிப்புக்களையும் வாய்ப்புக்களையும் நோக்கிய பாதையில் நாட்டை மீண்டும் கொண்டு வருவதற்கு இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கான நீண்டகால தீர்வுகள் தேவை. அவசரகாலப் பிரகடனம் இதைச் செய்யாது - என்று குறிப்பிட்டுள்ளார்.

**நியூசிலாந்து**

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் -

தெளிவான விளக்கம் வழங்கப்படாமல் மீண்டும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியதற்கு நியூசிலாந்து கவலை அடைகின்றது. இலங்கை மக்களின் சமீபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் மிகவும் அமைதியானவை. அவர்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டியவை. இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களைத் தீர்ப்பதற்குக் கவனம் செலுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

**கனடா**

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் -

கடந்த வாரங்களில் இலங்கை முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் அமைதியான கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையை அனுபவிப்பதற்கு நாட்டு மக்களைப் பெருமளவில் ஈடுபடுத்தியுள்ளன. இது இலங்கையின் ஜனநாயகத்திற்கு கிடைத்த பெருமையாகும். தற்போது அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியதன் அவசியம் என்ன என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது - என்று தெரிவித்துள்ளார்.

## மேலும் 3 கடற்படைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபடுத்தியுள்ளது.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக பொருள்களின் விலை கட்டுக்கடங்காது தொடர்ந்தும் ஏறிய வண்ணமே உள்ளது. இதன் காரணமாக தினமும் பலர் இந்தியாவிற்குத் தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு தப்பிச் செல்பவர்களில் ஒரு பகுதியினர் இந்தியாவை அடைகின்ற போதும் மேலும் ஒரு பகுதியினர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று முதல் இலங்கை இந்திய எல்லைப் பகுதியில் மேலதிகமாக 3 கடற்கலங்களை இந்திய கரையோரப் பாதுகாப்பு படையினர் பணியில் இறக்கியுள்ளனர்.

# இளைஞனை நிர்வாணமாக ஒளிப் படம் பிடித்து கப்பம் கேட்ட இளம் தம்பதி உட்பட 4 பேர் கைது

## கோப்பாய் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

இளைஞன் ஒருவரை நிர்வாணமாக ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்துக் கப்பம் கேட்டு மிரட்டினர் எனக் கூறப்படும் இளம் தம்பதி உள்ளிட்ட நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் செல்வபுரத்தைச் சேர்ந்த இளம் கணவன், மனைவி மற்றும் அவரது சகோதரர்கள் இருவரே நேற்றைய தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

சந்தேக நபர்கள் முகநூல் போலிக் கணக்கின் ஊடாக பெண் ஒருவர் போன்று சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞருடன் நட்பாகியுள்ளனர்.

பின்னர் இளைஞனைக் கோப்பாய்க்கு அழைத்துத் தமது வீட்டில் அறையில் பூட்டி வைத்து நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்ததுடன், ஒளிப்படம் மற்றும் காணொலிப் பதிவை மேற்கொண்டுள்ளனர்.

பின்னர் அந்த ஒளிப்படம் மற்றும் காணொலியை முகநூலில் பதிவேற்றப் போகிறார்கள் என அச்சுறுத்தி இளைஞனிடம் 2 லட்சம் ரூபா பணத்தை கோரியுள்ளனர். அச்சமடைந்த இளைஞன் வங்கிக் கணக்கில் அந்தப் பணத்தை கடந்த வாரம் வைப்பிலிட்டுள்ளார்.

இந்த நிலையில் மீளவும் இந்த வாரம் அந்த ஒளிப்படங்கள் மற்றும் காணொலியை பதிவேற்றப் போவதாக மிரட்டி இளைஞனிடம் 5 லட்சம் ரூபா கோரியுள்ளனர்.

அதனால் அச்சமடைந்த இளைஞன் கோப்பாய் பொலிஸ் நிலையில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை விசாரித்த பொலிஸார் இளம் தம்பதி உள்ளிட்ட நால்வரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான இளம் குடும்பத்தலைவர் இராணுவத்தின் வேலைப் பகுதியில் இணைந்து பணியாற்றி விலகியவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

# சரவணையில் கிணற்றுக்குள் விழுந்த சிறுமி உயிரிழந்தார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.08

யாழ்ப்பாணம் வேலணை, பகுதியில் நேற்று கிணற்றுக்குள் விழுந்த 11 வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சரவணைப் பகுதியைச் சேர்ந்த ரூபன் ஜதுசா என்ற 11 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்தவர்கள் அயல் வீட்டுக்கு சென்ற சமயம் சிறுமி நீராடுவதற்காக கிணற்றடிக்குச் சென்றுள்ளார். இதன்போது கால் தடக்கி கிணற்றுக்குள் விழ்ந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமியை கிணற்றுக்குள் இருந்து மீட்டு ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது, சிறுமி ஏற்கனவே இறந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரேத அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நீதிபதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுவெல நீதிவான் சனிமா விஜேபண்டாரவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு நீக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டிற்கு இலங்கை நீதிச் சேவைச் சங்கம் அதிருப்தி தெரிவித்திருந்தது. நேற்றுக் காலை முதல் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது என பொலிஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிபதிகளுக்கான பாதுகாப்பை வழங்குமாறு அனைத்துப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் வழங்கப்பட்ட சுற்றறிக்கையை மீறி தலங்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியிருந்தது.

இது தொடர்பில் தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை நீதிச்சேவைச் சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திரக் கட்சி மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பத்துக் கட்சிகளைச் சேர்ந்த சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயேச்சைக் குழுவாக இயங்கும் இந்த சுயாதீன அணியில் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுபற்றி பேசலாம் என்று சபாநாயகர் பதிலளித்திருக்கிறார்.

ஏற்கனவே பெப்ரவரியில் இவ்வாறு நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்த சமயத்தில் அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டது. எனினும் மீண்டும் அடுத்த ஒரு வாரத்துக்குள் அது விலக்கப்பட்டுவிட்டது. ஆகவே அந்த அவசரகால நிலைமை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல் ஒரு வார காலம் நடைமுறையிலிருந்து காலாவதியாகி இருக்கிறது. இப்போதும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்ட கையோடு - அடுத்த கூட்டத் தொடருக்கு இரண்டு வார காலம் இருக்கையில் - அவசரகால நிலைமை மீண்டும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற அமர்வு காலத்தைத் தவிர்த்து அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படுவது குறித்துக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இம்முறையும் நாடாளுமன்றத்தில் அவசரகால நிலைமை ஆராயப்பட முன்னர் அது திரும்பவும் நேரத்துடன் வாபஸ் பெறப்பட வாய்ப்புண்டு. இப்படி ஒவ்வொரு தடவையும் நாடாளுமன்றத்தைத் தவிர்த்து குறுகிய காலத்துக்கு அவசரகால நிலைமையைத் தனக்கு ஏற்ற மாதிரி சட்டரீதியாக அரசு முன்னெடுப்பதற்கு அனுமதிக்க முடியாது. ஆகையினால் உடனடியாக நாடாளுமன்றத்தை கூட்டி அவசரகால நிலைமை குறித்து விவாதிக்க ஒழுங்கு செய்ய வேண்டும் என்று சுமந்திரனும் சாணக்கியனும் வலியுறுத்தினர்.

அதனைச் செவிமடுத்த சபாநாயகர் நாளை நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அது குறித்து பேசலாம் என்று பதிலளித்தார்.